பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 18 சனிக்கிழமை (01.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 96

# இராணுவத் தளபதி பொன்சேகா இந்தியாவுக்கு அவசர விஜயம்

## இரு நாட்டு இராணுவ ஒத்துழைப்புக் குறித்துப் பேசுவதற்கு

புதுடில்லி, மார்ச் 1



இலங்கையின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா அவசர விஜயமாக நாளை இந்தியாவுக்குப் புறப்படுகிறார். ஒருவார காலம் இங்கு தங்கியிருக்கும் அவர் இலங்கை - இந்திய இராணுவ ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது குறித்து இந்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார்.

இலங்கை இராணுவத் தளபதி மிக உயர்மட்ட இந்திய பாதுகாப்பு உயர் அதிகாரிகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் சந்தித்துப் பேசுவார் என்றும் -

அதனைத் தொடர்ந்து முக்கிய விடயங்கள் குறித்து பல தரப்பினருடனும் கலந்துரையாடி இந்தியாவின் இராணுவ உதவியையும் ஒத்துழைப்பையும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள், வழிமுறைகளை ஆராய்வார் என்றும் - பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியாவின் ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவை தெரிவித்தது.

இலங்கை இராணுவத் தளபதியின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவரின் நிகழ்ச்சி நிரல் வெளியிடப்படவில்லை. புதுடில்லியிலுள்ள ''இன்டியா கேற்'' வளாகத்தில் படைவீரர் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்துவார். அதன் பின்னர் அவருக்கு இந்திய இராணுவத்தின் கேந்திர மையங்களில் ஒன்றான, பாதுகாப்பு அமைச்சின் தலைமையகமான ''சவுத் புளொக்'' இல் இராணுவ அணிவகுப்பு மாரியாதை வழங்கப்படும்.

இலங்கை இராணுவத் தளபதியின் புதுடில்லி விஜயம் குறித்து கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர்-

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் இலங்கை இராணுவம் தளர்வடைவதையோ, வேகத்தைக் குறைத்துக் கொள்வதையோ நாம் பார்க்க விரும்பவில்லை -

விடுதலைப்புலிகள் மீதான இலங்கை இராணுவம் தனது பிடியை இழந்துவிடுவதைப் பார்க்க விரும்பவில்லை. ஆயினும், இலங்கைக்கு உயிராபத்து விளைவிக்காத ஆயுதங்களை வழங்குதனை விட, இராணுவத் தலையீடு எதனையும் மேற்கொள்ளும் கேள்விக்கு இடமில்லை - என்று தெரிவித்தார்.

இந்திய-இலங்கைக் கடல் எல்லைகளில் இரண்டு நாடுகளின் கடற்படைகளும் ஒன்றிணைந்த ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அத்தோடு, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்த புலானாய்வுகளையும் பகிர்ந்துகொள்கின்றனர் - என்றும் பாது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முகத்துவாரத்தில் நேற்று குண்டு வெடிப்பு மூன்று பொலிஸார் உட்பட எழுவர் காயம்

## தற்கொலைத் தாக்குதல் எனத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

கொழும்பு, முகத்துவாரத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். மூன்று பொலிஸார், நான்கு பொதுமக்கள் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர். சம்பவத்தில் கொல்லப்பட்டவர் தற்கொலைக் குண்டுதாரி என்று பொலிஸார் தெரிவித்தனர். தற்கொலைக் குண்டுதாரியின் தலை, சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து நான்கு வீடுகளுக்கு அப்பால் சிதைவடைந்த நிலையில் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முகத்துவாரம் வோல்ஸ் லேனில் உள்ள 'ரெட்பானா' தோட்டத்தில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த எழுவரும் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ''கலர் லாப்'' சேவைகள் வழமை போல் நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.நகரின் மத்திய பகுதியில் உள்ள தனியார் புகைப்படப் பிரதியாக்க நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீவிபத்தினால் இயந்திரங்கள், உபகரணங்களுக்குச் பெரிதாகச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

'கலர் லாப்' பிரதியாக்க நிலையத்தின் ஒரு பகுதி மட்டுமே இந்தத் தீவிபத்தின் போது சேதமடைந்ததாகவும், இந்த விபத்தினால் அங்கு இருந்த பெறுமதிவாய்ந்த நவீன இயந்திர சாதனங்களுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் கண்காணிப்பு அலுவலகம்

# பிரிட்டனின் கோரிக்கை இலங்கையால் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 1

மனித உரிமைகள் கண்காணிப்பு அலுவலகம் ஒன்றை இலங்கையில் நிறுவுமாறு பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மெலொட் பிரவுண் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசு அடியோடு நிராகரித்து விட்டது.

இலங்கையில் நிகழ்ந்து வரும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த மனித உரிமைகள் கண்காணிப்பு அலுவலகம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் லூவிஸ் ஆர்பர் அம்மையார் சிபார்சு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை நிலைமை பற்றிய விடயத்தில் அமெரிக்கா - இந்தியா ஒருமித்த கருத்து

## வாஷிங்டனில் உயரதிகாரி தகவல்

வாஷிங்டன், மார்ச் 1

இலங்கையில் மீண்டும் வன்முறைகள் மூண்டுள்ளமை குறித்து அமெரிக்கா அச்சம் வெளியிட்டுள்ளதுடன், இந்தியாவும் இதே உணர்வைக் கொண்டிருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் நிக்கொலஸ் பேர்ன்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்னாசியாவில் இந்தியாவும் அமெரிக்காவும் சகாக்களாக மாறியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாஷிங்டனில் வெளிநாட்டுச் செய்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தப்பகுதிக்கு ஊடகவியலாளர்கள் செல்ல அரசு அனுமதிக்க வேண்டும்!

## இப்படிக் கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு, மார்ச் 1

யுத்தத்தின் உண்மை நிலையை நாட்டுக்குத் தெளிவுபடுத்துவதற்காக ஊடகவியலாளர்களை யுத்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும் என்று ஐ.தே.கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரச ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை மாத்திரம் இதற்கு அனுமதிப்பது போதாது என்றும், தனியார் ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

அக்கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பிக்குள் வலுக்கிறது உட்கட்சி முரண்பாடு!

கொழும்பு, மார்ச் 1

ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்களிடையே அதிகாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள மனக்கசப்பு பெரும் உட்கட்சிப் பூசலாக உருவெடுத்துள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தீவிர அரச எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருக்கும் கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும் அரசுக்கு ஆதரவு மிதவாதப் போக்கை விரும்பும் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸவுமே பிளவுபட்டு நிற்கும் இரு கன்னைகளுக்கும் தலைமை வகிக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக நிலைப்பாடு எடுத்து, அரசுக்கு முண்டுகொடுக்க முயலும் விமல் வீரவன்ஸ அணி குறித்து, மாற்று அணி கட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அடிவாங்கிய இலங்கைக்கு ஆறுதல்; இறுதிக்கு நுழைந்த ஆஸி சறுக்கல்



கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத்தொடரின் கடைசி லீக் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு அடி கொடுத்த இலங்கை அணி 13ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றியைப் பதிவு செய்தது.

மெல்போர்ணில் நேற்று நடந்த இந்தப் போட்டியில் 222 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 208 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது. ஆரம்ப வீரர்கள் சரியான அடித்தளம் அமைத்துக்கொடுத்த போதும் பின்னர் வந்த வீரர்கள் சிறப்பாக ஆடாதமையால் ஆஸி. அணி தோல்வி அடைய நேரிட்டது. ஆரம்ப விக்கெட்டுக்காக கில்கிறிஸ்ற் - ஹோப்ஸ் ஜோடி 107 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. கில்கிறிஸ்ற் 83 ஓட்டங்களுடனும், ஹோப்ஸ் 28 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

தொடர்ந்து வந்தவர்களான பொண்டிங் ஓர் ஓட்டத்துடனும், மைக்கல் கிளார்க் மற்றும் சைமண்ஸ் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாமலும், ஹசே 5 ஓட்டங்களுடனும், பிரட் ஹடின் 7 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

கடைசியில் போராடிய பிரட் லீ 37 ஓட்டங்களுடன் 48.1ஆவது ஓவரில் இறுதி விக்கெட்டாக ஜெயசூரியாவால் 'போல்ட்' செய்யப்பட ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸ் 208 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் அமரசிங்க 3 விக்கெட்டுகளையும், முரளிதரன் மற்றும் குலசேகர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், மலிங்க, கப்புகெதர, ஜெயசூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. அணிக்கு இம்முறையும் சரியான ஆரம்பம் கிடைக்கவில்லை. ஆரம்ப வீரர்களான டில்ருவான் பெரேரா 5 ஓட்டங்களுடனும், ஜெயசூரியா 23 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். அடுத்துவந்த சங்ககார வெறும் 11 ஓட்டங்களுடன் ஜோன்ஸனின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். கப்புகெதர (2) இம்முறை ஏமாற்றினார். 61 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இலங்கை அணி இழந்து தவித்தது.

5ஆவது விக்கெட்டில் இணைந்த மஹேல - டில்சான் ஜோடி நிதானமாக ஆடி அணியைத் தூக்கி நிறுத்தியது. இருவரும் தம்மிடையே 64 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் 44ஆவது ஒருநாள் அரைச்சதத்தை நிறைவுசெய்திருந்த மஹேல, ஹொக்கின் சுழலில் எல்.பி.டபிள்யூ. ஆனார். தொடர்ந்து சமர சில்வாவுடன் இணைந்த டில்சான், விக்கெட்டுகளுக்கிடையில் விரைவாக ஓடி ஓட்டங்களைச் சேர்த்தார். இந்த ஜோடி 60 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் டில்சான் 62 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார். 70 பந்துகளைச் சந்தித்த அவர் 3 பவுண்டரிகளையும் தனது ஓட்ட எண்ணிக்கையில் சேர்த்திருந்தார். சமர சில்வா 35 ஓட்டங்களுடன் பிரக்கனின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

மலிங்க ஓட்டமெதுவும் பெறாமலும், முரளிதரன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க இலங்கை அணியின் இன்னிங்ஸ் 50 ஓவர்கள் நிறைவில் 221 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

ஆஸி. அணியின் பந்துவீச்சில் பிரக்கன் 4 விக்கெட்டுகளையும், பிரட் லீ 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இந்த ஆட்டத்தின் நாயகனாக கில்கிறிஸ்ற் தெரிவனார்.

முத்தரப்புத் தொடரின் இறுதியாட்ட வாய்ப்பை இலங்கை அணி ஏற்கனவே இழந்திருந்தமை தெரிந்தே.

## ஹெனின் தோல்வி

டுபாய், மார்ச் 01

டுபாய் பகிரங்க டெனிஸ் போட்டியில் காலிறுதிச் சுற்றில் முதல்நிலை வீராங்கனையான ஜஸ்ரின் ஹெனின் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் இத்தாலி வீராங்கனையான பிரான்சிஸ்கா சிவோனியை ஹெனின் எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே இருவரும் கடுமையாகப் போராடினர். இதனால் இரு செற்களும் 'ரை பிரேக்கர்' வரை சென்றது. அவற்றில் அபார திறமையை வெளிப்படுத்திய சிவோனி 7:6, 7:6 என்ற நேர்செற்கணக்குகளில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றதுடன் ஹெனினைத் தொடரிலிருந்து வெளியேற்றினார்.

(சி)

### பங்களாதேஷ் உடனான 2ஆவது டெஸ்ட்;

## உலக சாதனையை நோக்கி தென்னாபிரிக்க அணி முதல்நாளில் விக்கெட் இழப்பின்றி 405 ஓட்டங்கள்

சிட்டகொங், மார்ச் 01

ஆரம்ப வீரர்களான கிரேம் சிமித்தின் இரட்டைச் சதமும், நீல் மக்கென்ஸியின் சதமும் கைகொடுக்க பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி மிகவும் பலமான நிலையைப் பெற்றுள்ளது. நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 405 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆரம்ப விக்கெட்டுக்காக 413 ஓட்டங்கள் சேர்த்துள்ளமையே உலக சாதனையாக இருந்து வருகின்றது. 52 வருடங்களாக நீடித்திருக்கும் அந்தச் சாதனையை இன்று சிமித் - மக்கெய்ன்ஸி ஜோடி முறியடித்து புதிய உலக சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1956ஆம் ஆண்டு இந்திய ஆரம்ப ஜோடிகளான மங்கட் - றோய் ஆகியோர் நியூஸிலாந்துக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதல் விக்கெட்டுக்காக 413 ஓட்டங்களைச் சேர்த்து சாதனை புரிந்திருந்தனர்.

டெஸ்ட் போட்டிகள் வரலாற்றில் முதல் விக்கெட்டுக்காக 400 ஓட்டங்களுக்கு மேல் சேர்ப்பது இது மூன்றாவது தடவையாகும். முதலிரண்டு இடங்களிலும் (413, 409) இந்திய அணி உள்ளது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள தென்னாபிரிக்கா அணி 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலில் பங்கேற்கின்றது. தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று சிட்டகொங்கில் ஆரம்பமானது.

(சி)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நேசமலர் தேவராஜா

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனாவைத்தியசாலை)



அரியாலை, கண்டிவீதியை (புறூடி முன் ஒழுங்கை) பிறப்பிடமாகவும் களுபோவில வை வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி நேசமலர் தேவராஜா நேற்று (29.02. 2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் யோகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், தேவராஜாவின் (ஓய்வுபெற்ற பிரதம புகையிரத பாதுகாவலர்) அன்பு மனைவியும், Dr.பீஷ்மன், அரவிந்தன் (கொமர்ஷல் வங்கி , யாழ்ப்பாணம்), கௌரிபாகன் (மருத்துவ பீடம், 24ஆம் அணி, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.சிவாஜினி, நீலகி, பாலமதி (மக்கள்வங்கி, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கணேசதாசன், கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாசிலாமணி, ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், தாரகா, லக்ஷான் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிப்பிரவீனின் பெரியதாயாரும், தேஜஸ்வனி, அனிந்தகி, ருக்ஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2008) சனிக்கிழமை களுபோவிலவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலை இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு, தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணிக்கு பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No.15/1A, Temple,*
*Kalubowila.*
*TP.No.0115656795*

தகவல்:
ஐயாத்துரை தேவராஜா
(கணவர்)

(A)

### கந்தசாமி றோகினி



காளிகோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி றோகினி 28.02.2008 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் மனைவியும், அப்புத்துரை தம்பதியினரின் மகளும், சதீஸ், காளிதாசன், செந்தூரன், புவிதாஸ், புஸ்பதாஸ், புவனதாஸ், கிருத்திகா ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

(B)

*தகவல்:*
பிள்ளைகள்


## விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் இன்று தொடக்கம் இடம் பெற விருந்த விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

காலநிலை சீரின்மையால் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் போட்டிகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாயநாதன் தெரிவித்தார். (-1)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 1

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த சென்.சாள்ஸ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என அதிபர் அறிவித்துள்ளார்.

(1)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

மட்டுவில் பிரதேச பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கான கல்வி தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு இன்று பி.ப 1.30 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடத்தப்பட வுள்ளது.

மட்டுவில் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 1

மட்டுவில் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான நிதி நிர்வாகம் தொடர்பான வாண்மை விருத்திச் செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு மட்டுவில் சந்திபுர ஸ்கந்தவரோதய ம.வி யில் நடைபெறும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடத்தப்படும் செயலமர்வில் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி, வரணி, மீசாலை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட மேற்படி செயலமர்வுகளில் பங்குபற்றாத அதிபர்களையும், ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(1-207 )


### மந்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ரேவாநேசன், திரு.வை.இராசரத்தினம் அவர்களின் சேவைநலன் பாராட்டு



*சாவகச்சேரி கிராம சேவை அலுவலராகக் கடமையாற்றி 2008.02.09 ஆம் திகதி ஓய்வு பெற்ற மந்துவில் ஸ்ரீகந்தசுவாமி கோவில் நிர்வாக சபைத் தலைவர் அவர்களின் கிராம சேவைப் பணியுடன் சமய, சமூகப் பணிகளையும் மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.*

நிர்வாக சபையினர்,
மந்துவில் புளியந்திடல் கந்தசுவாமி கோயில்.

(D)

## கண்ணீர் அஞ்சலி

யா/கச்சாய் அ.த.க.பாடசாலையின் ஆசிரியை

*திருமதி கே.இந்திரகுமார் அவர்களின் அன்புத் தந்தை*

### திரு.ஆறுமுகம் செல்வத்துரை

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக் கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிஒன்றியம்,
யா/கச்சாய் அ.த.க.
பாடசாலை, கொடிகாமம்

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(71589)

## மரண அறிவித்தல்

### பொன்னையா இராமுப்பிள்ளை

*(பிரபல புகையிலை வர்த்தகர்)*



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல புகையிலை வர்த்தகர் பொன்னையா இராமுப்பிள்ளை நேற்று (29.02.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரியின் அன்பு மாமனும், தர்மபூபதியின் மைத்துனரும், காலஞ்சென்ற துரைராசா, செல்லம்மா ஆகியோரின் சகோதரரும், சாலினி, துஷ்சாந்தினி, தயாபரன், யாழினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2008) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு.*

(C)

*தகவல்:*
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலைக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வசதி

நீர்வேலி,மார்ச்1

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் என்.தங்கராசா தெரிவித்தார்.

இந்த குழாய் மூலமான குடிதண்ணீர் வசதிக்கான சகல உதவிகளையும் நீர்வேலி கருணாலய சிறுவர் இல்லம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதுவரை காலமும் மாணவர்கள் பாடசாலைக் கிணற்றில் இருந்தே குடிதண்ணீரைப் பெற்றுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (202-224)

# வாகன உரிமை மாற்றப் பத்திரங்கள் தனிப்பட்ட விலாசங்களுக்கே அனுப்பிவைப்பு

## மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச்.1

வாகன உரிமை மாற்றத்திற்காகக் குடாநாட்டிலிருந்து விண்ணப்பித்தவர்களின் உரிமை மாற்றப் பத்திரங்கள் கொழும்பில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் உரியவர்களின் தனிப்பட்ட விலாசங்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றன என யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

விண்ணப்பதாரிகள் சிலர் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்குச் சென்று உரிமை மாற்றப் பத்திரங்கள் தொடர்பாக விசாரித்ததை அடுத்தே இது தொடர்பாக அவர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டு விண்ணப்பதாரிகளுக்கான உரிமை மாற்றப் பத்திரங்கள் எவையும் யாழ். திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை.

2007 ஆம் ஆண்டுக்கு முன் விண்ணப்பித்து உரிமை மாற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் இங்கு வந்தபொழுது உரியவர்கள் உரிய விலாசத்தில் வசிக்காத காரணத்தால் மீண்டும் திரும்பி கொழும்புக்கு தபால் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டன அவை மட்டுமே யாழ்.திணைக்களத்தால் கையில் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

இவற்றில் கணிசமனவை உரியவர்களால் பெறப்பட்டுள்ளன. இன்னும் சில வழங்கல்கள் உள்ளன என்று அந்த வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(202-302)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச்1

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றம் 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சுன்னாகம், சிவன்கோயில் வீதியில் 7 மில்லி கிராம் கஞ்சாவுடன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவரை மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில ஆஜர் செய்தனர்.

குற்றச்சட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து நீதிவான் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (202)

## உள்ளூராட்சி சபைகளில்

## ஓய்வூதியக் கொடுப்பனவை இதுவரை பெறாதவர்களுக்கு உடன் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்1

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற போதிலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறாதவர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுவரை ஓய்வூதியம் கிடைக்காத ஓய்வூதியர்களின் விவரங்களை - ஏன் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்ற காரணத்துடன் அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் சகல உள்ளூராட்சிசபைச் செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

அத்துடன் ஓய்வூதிய வேலைகளை நிலுவையாக வைத்திருக்கும் நிறுவனத்தின் தலைமை அலுவலர் மற்றும், அவ்விடயத்திற்குப் பொறுப்பான முகாமை உதவியாளர் ஆகியோருக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்துள்ளார்.

இவ்வாறு ஓய்வூதிய சேவைகள் தொடர்பில் நிலுவைகள் வைத்திருக்கும் திணைக்களத்தின் பிரிவுத் தலைவர்கள், முகாமை உதவியாளர்கள் ஆகியோருக்கு சேவை நீடிப்போ, மீள் நியமனமோ வழங்குவதை சிபார்சு செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (202-207)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்1

வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணாநந்தன் கலந்து கொள்வார். (202-70-207)

* * *

பருத்தித்துறை, மார்ச்.1

மேலைப் புலோலி சிவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் எம். கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசனும், சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதியும் கலந்து கொள்வர். (202,218)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்1

யாழ்.இளையதம்பி வித்தியாலயத்தின் இல்ல மென்வன்மைப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான ப.கணேசலிங்கம் கலந்து கொள்வார்.





துன்னாலை காசிநாதர் வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவினர் அண்மையில் மனை முகாமைத்துவ தொழிற்பயிற்சிக் கண்காட்சியை நடத்தினர். நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் முறைசாரக் கல்வி செயற்றிட்ட இணைப் போதனாசிரியர் செல்வி அருந்தசா சிதம்பரநாதனும் காணப்படுகிறார். பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் இணைந்து கண்காட்சியைப் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

*(படங்கள்: சுந்தா)*

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்1

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் உலக வங்கியின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீள் எழுச்சித் திட்டம் தொடர்பான அறிமுக நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என யாழ்.செயலக மீள் எழுச்சித்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.(202-207)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்1

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற் பகல்.11.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

உதவி மாவட்ட செயலாளர் லயன் டாக்டர் வி.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஆளுநர் லயன் சுனில் வட்டவளை கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்1

விழி உளவளத் துணை நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 'உளமார' சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உளவளத் துணையாளர் ஆர்.சந்திரசேகரசர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொள்வார். (202)

* * *

வலி.தென்மேற்கு,மார்ச்1

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய தையல், மனையியல் பயிற்சிநெறியின் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 10.30 மணிக்கு கண்காட்சியை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்துவைப்பார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி, சங்கானை பிரதேச செயலர் திருமதி தே.பாவு உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வர். (202-135)

## 'லுமும்பா' திரைப்படம் ஞாயிறன்று யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாணம்,மார்ச்1

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அரசறிவியல்துறை விரிவுரை மண்டபத்தில் சர்வதேசப் புகழ்பெற்ற இயக்குநரான றோல் பெக்கின் திரைப்படமான "லுமும்பா" (Lumumba) எனும் திரைப் படம் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

இருண்ட ஆபிரிக்காக் கண்டத்தை ஒளியூட்டப் புறப்பட்ட கொங்கோவின் புதல்வன் - மக்கள் புரட்சியாளன் பற்றிக் லுமும்பாவின் உண்மைக் கதையைப் பின்னணியாகக் கொண்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஏகாதியபத்தியவாதிகளின் சதிவலையில் சிக்குப்பட்டு லுமும்பா ஒரு துன்பியல் வரலாற்று நாயகனாக எவ்வகையில் மாற்றப்பட்டான் என்பதைத் துல்லியமாகச் சித்திரிக்கும் இப்படம், சர்வதேசப் பரிசுகள் பலவற்றைப் பெற்றதாகும். அரசறிவியல் விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கத்தின் அறிமுக உரையைத் தொடர்ந்து படக் காட்சி இடம்பெறும். படக் காட்சியின் இறுதியில் படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.

இத்திரைப்படக் காட்சிக்கு ஆர்வலர் அனைவரும் வருகைதந்து பயன்பெற முடியும் என்று புறநிலைப் படிப்புகள் இணைப்பாளர் தெரிவித்தார். (அ)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# முகாமைத்துவ உதவியாளர் அதிசிறப்புச் சேவை: பதவியுயர்வுப் பரீட்சையில் சித்திபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச்1

வடமாகாண திணைக்களங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை அதிசிறப்புத்தர சேவைக்கு பதவியுயர்வு வழங்குவதற்காக திறமை அடிப்படையில் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்ற 30 பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெயர் விவரங்கள் வருமாறு:

திருமதி பே.ஆறுமுகம் (யாழ். மாநகர சபை), க.சரவணபவன் (தென்மராட்சி கல்வி வலயம்), என்.சிவலிங்கம் (மன்னார் கல்வி வலயம்), கே.பழனிமலைநாதன் (மாகாண கணக்காய்வு உப அலுவலகம், யாழ்ப்பாணம்), திருமதி அ.நாகேஸ்வரி (வவுனியா நகரசபை), இ.திருமேனி (வவுனியா தெற்கு பிரதேச சபை), எஸ். சந்திரமோகன் (வடமராட்சி கல்வி வலயம்), ஈ.தேவஅருள்ராஜா (வேலணை கல்வி வலயம்), திருமதி பீ.சிவலிங்கம் (வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்), திருமதி எஸ். சொக்கலிங்கம் (வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்),

ஜே.தளையசிங்கம் (நல்லூர் பிரதேச சபை), எஸ்.தர்மகீர்த்தி (தென்மராட்சி கல்வி வலயம்), ரி.சிவயோகி (வலி. வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை), ப.வைத்தியகுமார் (யாழ். தேசிய கல்வியற் கல்லூரி), மா.சுப்பிரமணியம் (சாவகச்சேரி நகரசபை), எஸ். திலகரட்ணம் (வவுனியா நகரசபை), எஸ். திருஞானசம்பந்தர் (பருத்தித்துறை நகரசபை), எஸ்.ர.இராஜேஸ்வரி (மன்னார்), எம்.சபாநாதன் (யாழ்.கல்வி வலயம்), செல்வி வி. சிவக்கொழுந்து (சாவகச்சேரி நகரசபை),

எஸ்.யோகராசா (யாழ். மாநகரசபை), ப.சந்திரமோகன் (வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, நெல்லியடி), எம். கதிரமலைப்பிள்ளை (அளவெட்டி மத்தி) கே.தெய்வகுலரத்தினம் (யாழ். மாநகர சபை), எஸ்.ஜெயவசீகரன் (வடமராட்சி கல்வி வலயம்), கே.தவரசா (வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), திருமதி ஆர்.சத்தியானந்தன் (பருத்தித்துறை நகரசபை), எஸ்.ஜெயபாலன (யாழ். மாநகர சபை), சீ.கந்தையா (வவுனியா கல்வி வலயம்), செல்வி ஆ.ஞானதேவி (யாழ். மாநகர சபை). (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவான மூன்றாவது அணியை உருவாக்க தி.மு.கவுடன் பேச்சு

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் உமாநாத் பேட்டி

சென்னை,மார்ச்.01

காங்கிரஸ் - பாரதீய ஜனதா அல்லாத மாற்று அணியை உருவாக்க தி.மு.கவுடன் பேச்சு நடக்கிறது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஆர்.உமாநாத் கூறினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஆர்.உமாநாத் சென்னையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளருக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் 19ஆவது அகில இந்திய மாநாடு, மார்ச் மாதம் 29ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை கோவையில் நடைபெறுகிறது. தமிழ் நாட்டில் இந்த மாநாடு 3ஆவது முறையாக நடத்தப்படுகிறது.

காங்கிரஸ் - பாரதீய ஜனதா கட்சிகளுடன் ஒரு மாற்றுத் திட்டத்தின் அடிப்படையில் மாற்று அணி அமைப்பது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பேச்சு நடத்தி வருகிறது.

தற்போது மத்திய கூட்டணி ஆட்சியில் உள்ள தி.மு.க.உட்பட பல்வேறு மாநிலக் கட்சிகளுடன் பேச்சு நடந்து வருகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் என்.வரதராஜன் ஊடகவியலாளர்களிடம் கூறியவை வருமாறு:-

தி.மு.க.அரசின், மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்களை வரவேற்பது என்றும், அதைத் சிறப்புற அமுல்படுத்தும்படி வற்புறுத்த வேண்டும் என்றும் முடிவு எடுத்து இருக்கிறோம்.

தி.மு.க.அரசு கொடுத்த வாக்குறுதிகளை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் கூட்டாக மக்கள் பிரச்சினைகளுக்காக இயக்கங்களை நடத்துவது என்றும் முடிவு செய்து இருக்கிறோம். மக்களுக்கான நன்மை பயக்கும் திட்டங்கள் இடைத்தரகர்களின் தடையின்றி நடைபெற வேண்டும்.

சமீபத்தில் கூட ஆசிரியர் பயிற்சி பள்ளியில் அங்கீகரிக்கப்பட்ட இடங்களுக்கு மேலாக அதிக மாணவர்களைச் சேர்த்ததால் 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பரீட்சை எழுத அனுமதிச்சீட்டுக் கிடைக்காமல் அவதிப்பட்டனர். எனவே, கல்வியில் அரசு இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

தி.மு.க.அரசின் மக்கள் நலன் பயக்கும் திட்டங்களை வரவேற்போம். அதே நேரத்தில் அதில் ஏற்படுகின்ற சில ஊழல்களையும் நாங்கள் எதிர்ப்போம்.

கோவை மாநாட்டின் நிதி வசூல் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. மார்ச் மாதம் 10ஆம் திகதி மாநிலம் முழுவதும் கட்சி தலைவர்கள் தலைமையில் வீதி, வீதியாக சென்று மாநாட்டுக்கான நிதி திரட்ட இருக்கிறார்கள்- இவ்வாறு என்.வரதராஜன் கூறினார்.

# தமிழக மீனவர்களை கச்சதீவுக்குச் சென்று மீன்பிடிக்க இலங்கை அனுமதிப்பதில்லை

## கண்ணிவெடிகளை அகற்ற இலங்கையை வற்புறுத்தக் கோரிக்கை

புதுடில்லி,மார்ச்.01

தமிழக மீனவர்கள் கச்சதீவுக்குச் சென்று மீன்பிடிக்க இலங்கைக் கடற்படை அனுமதியளிப்பதில்லை என்று குற்றஞ் சாட்டியுள்ளார் கம்யூனிஸ்ட் கட்சித் செயலர் டி.ராஜா.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி தமிழக மீனவர்கள் கச்சதீவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தும் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களைக் கச்சதீவு அருகே சென்று மீன்பிடிக்க அனுமதிப்பதில்லை என்று கூறினார்.

சேது சமுத்திரத் திட்டத்துக்கு உச்ச நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இதுவரை எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டுள்ளது. என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளன என்பது குறித்து மத்திய அரசு அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள பாக். ஜலசந்தியில் இலங்கைக் கடற்படை கண்ணிவெடிகளை மிதக்கவிட்டுள்ளது. இது தமிழக மீனவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

எனவே, கண்ணிவெடிகளை அகற்றுமாறு இலங்கை அரசிடம் இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். இலங்கை அரசின் இந்த நடவடிக்கை சர்வதேச சட்டத்தை மீறியதாகும். இதுவரை ஒருவார்த்தை கூட இலங்கை அரசிடம் இது தொடர்பாக இந்திய அரசு கேட்கவில்லை - என்றார் ராஜா.

## இந்தியக் கடலில் 21 இலங்கையர் கைது

நாகப்பட்டினம், மார்ச். 01

இலங்கையைச் சேர்ந்த 21 பேர் இந்தியக் கடற்பகுதியில் சிக்கினர்.

அவர்கள் மீனவர்களா என்பது குறித்து கடலோரக் காவல் படையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாகப்பட்டினம் அருகே சர்வதேசக் கடல் எல்லை அருகே கடலோரக் காவல் படை அதிகாரிகள் கப்பலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள்.

அப்போது ஒரு படகு இந்திய எல்லைக்குள் வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த அதிகாரிகள், துப்பாக்கி முனையில் படகைச் சுற்றி வளைத்தனர்.

படகில் 21 பேர் இருந்தனர். அவர்களைப் படகுடன் பொலிஸார் பிடித்துச் சென்னைக்கு அழைத்து வந்தனர்.


### அறிவித்தல்

எமது சேவைகள் யாவும் வழமைபோல்
நடைபெறுகின்றன என்பதனை எமது
வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.
- நிர்வாகி.

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
62/17, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(சி/551644)


### 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 20 - 12 - 1935



உதிர்வு 07 - 03 - 2002

**அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்**

திதி: நவமி

*தொலைந்து போன நெஞ்சத்தின் நினைவுகள்*
*மகிழ்ச்சியில் மரணிக்கும் நிறைவேறிய நிறைவேறாத ஆசைகள்*

*கடைசியாகக் கண்ணுறங்கித் தினமும்*
*எம் உள்ளத்தில் வாழும் அப்பாவே!*
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

*சங்கம் வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
(சி/551636)
குடும்பத்தினர்.
*(கனடா)*


### விற்பனைக்கு

26ஸ்ரீ XXXX இசுசு லொறி
43-XXXX M.M.C ஹண்டர்
14½ அடி நீளப் பெட்டியுடன்
4590 XXX சன்டெல் இணைப்பு
தொடர்பு:-
35. நல்லூர் குறுக்கு வீதி.
யாழ்ப்பாணம். தொ.பே. 0602218434

### மணமகன் தேவை

றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த அரசாங்க தொழில் புரியும் 31 வயது 5' 5'' உயரமுடைய பட்டதாரி மகளுக்கு கொழும்பு அல்லது அதனை அண்மித்த பிரதேசங்களில் தொழில் புரியும் தகுந்த மணமகன் தேவை
தொடர்பு 0776406926
மே/பா: 3068, உதயன்

### புறோயிலர் தேவை

புறோயிலர் விற்பனைக்குத் தேவை.
வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.
வீவஸ் பாம், பலாலி வீதி,
(நல்லூர்AGA அலுவலகம் முன்பாக) திருநெல்வேலி.

### விற்பனைக்கு

Shell Gas *வெற்றுச் சிலிண்டர்கள்*, SLT CABLE
Telephone Line, Oven, MD-90 Motor cycle
*தொடர்பு: S. பிறேம், றக்கா றோட், யாழ்ப்பாணம்*
T.P :9201

### CAR FOR SALE

Honda Civic Exi, Brand New Japan, 1997
Low Mileage, Full option, Manual,
Excellent Condition, AC
T.P - 222 3239, 222 5755



### அறிவித்தல்

**யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

இன்று (01.03.2008) சனிக்கிழமை காலை
நடைபெறவிருந்த இல்ல மெய்வன்மைப் போட்டி தவிர்க்க
முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
போட்டிகள் (04.03.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல்
1 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருவதுடன்
சகலரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவிகள் சங்கம்


**யாழ்.மாவட்ட**
**பேக்கரி உரிமையாளர் சங்கம்**

### கண்ணீர் அஞ்சலி

*27.02.2008 அன்று காலமான எமது சங்கத்தின்*
*முன்னாள் மாவட்ட செயலாளர்*

**நவரட்ணம் பாலவிநாயகர்**

*அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை*
*காணிக்கையாக்குவதோடு அவர் தம்*
*குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த*
*அனுதாபங்களைத் தெரித்துக் கொள்கின்றோம்.*

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.
(யா.மா.பே.உ.சங்கம்)
(சி/551647)

### கண்ணீர் அஞ்சலி

*எமது தேவஸ்தான ஆலய நிர்வாக சபையின் முன்னாள் தலைவர்*



அமரர்

**லயன் நவரட்ணம் பாலவிநாயகர்**

*(ருவிங்கிள் ஸ்ரார் பாலா)*

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் .*

**- ஆலய பரிபாலன சபை.**

ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானம்,
கொழும்புத்துறை வீதி, பண்டியந்தாழ்வு.
(71556)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் செல்லத்துரை (தியாகு)

கச்சாய் தெற்கு, பாதாள வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லத்துரை (தியாகு) நேற்று(29.02.2008) வெள்ளிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் நாகமுத்து, பாறுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற சரஸ்வதி, செல்வராசா (கனடா), ஈஸ்வரி, கேதீஸ்வரி(ஆசிரியை, கச்சாய் அ.த.க.பாடசாலை) அருட்செல்வன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணசாமி, கனகரத்தினம், குணேஸ்வரி (கனடா), சிவகுமாரன், இந்திரகுமார்(ஆசிரியர், மன்னார் RCTMS), ராகினி (வவுனியா) ஆகியோரின் மாமனும் நகுலா, நளினா, நந்தகுமார் (கனடா) சகிதா(உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி), சுபேதிகா(யாழ்.பல்கலைக்கழகம், கலைப்பிரிவு), வினோதாஸ், தேசிகா(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.), கபிலன்(கனடா), கீர்த்திகன் (கனடா), வின்சன்(யா/சாவ. இந்துக் கல்லூரி), சகிலன், சகினா, மகிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் அனாசினின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.03.2008) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.*
(சி/551643)
தகவல்
குடும்பத்தினர்.

### நவரட்ணம் பாலவிநாயகர்

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் பால விநாயகர் (பாலு) 27.02.2008 அன்று கொழு ம்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பிறேமா தம்பதியினரின் அன்பு மகனும், வசந்தியின் அன்புச் சகோதரனும் நவரட்ணம் மற்றும் காலஞ்சென்ற திருமதி நவரட்ணம் தம்பதியினரின் மருமகனும், சுமித்திராவின் அன்புக் கணவரும் தனுப்பிரியன், சுபிச்சா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலகரத்தினத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் நேற்று (29.02.2008) வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாண்டியன் தாழ்வு சந்தனமாதா*
*கோவில் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
(71578)
தகவல்:
ஏ. ஆனந்தராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்க விளையாட்டின் தரத்தை உயர்த்த பாடசாலை மட்டத்தில் பயிற்சிகள் அவசியம்

கடந்த காலங்களில் சதுரங்கப் போட்டிகளில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்பட்டபோதிலும் போட்டியின் தரம் சிறந்ததாகக் காணப்பட்டது. எனினும் இப்போது அந்தப் போட்டியில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும் அதன் தரம் குறைந்துகொண்டே செல்கின்றது.

சதுரங்க விளையாட்டு இன்று பல பாடசாலைகளில் மாணவர்களிடையே விளையாடப்பட்டு வருகின்றது. பாடசாலை மட்டத்தில் இதனை வளர்த்தெடுப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

சதுரங்கம் இன்று சர்வதேச மட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்டு போட்டிகள் இடம்பெறுகின்றன. சதுரங்க விளையாட்டைப் பற்றிய கூற்றுகளில் முக்கியமானது, சதுரங்கம் விளையாடுபவர்களின் நுண்ணறிவு 17 வீதம் அதிகரிப்பதுடன் அவர்களுக்கு மறதி என்பது இல்லாமல் போவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய விளையாட்டான சதுரங்க விளையாட்டைப் பாடசாலைகளில் ஊக்குவிக்க வேண்டியது கல்வி அதிகாரிகளினதும் பாடசாலை அதிபர்களினதும் கடமையாகும்.

தற்போது பாடசாலைகளில் சதுரங்க விளையாட்டைக் கற்பிக்கும் திறன் கொண்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆசிரியர்கள் இந்த விளையாட்டுத் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுச் செயற்பட்டால் மாணவர்களுக்கு இதனைச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கமுடியும்.

1976ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய மட்டத்தில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:

வலிகாமம் கல்விக் கோட்டத்தில் சதுரங்க விளையாட்டை அபிவிருத்தி செய்யும்முகமாக ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது, இதன் அடிப்படையில் பயிற்சிக்கு ஆசிரியர்கள் அழைக்கப்பட்டபோது முதல்நாள் 16 பேர் வருகை தந்தார்கள். இரண்டாம் நாள் ஒருவர் மட்டுமே பயிற்சிக்கு சமூகம் கொடுத்தார்.

இதேபோன்று யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் பயிற்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு தொகுதி ஆசிரியர்கள் முதல் நாள் வகுப்புக்கு வருகை தந்தார்கள். கடந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இம்முயற்சியில் முதல்நாள் வந்த பாடசாலை ஆசிரியர்கள் சதுரங்கக் கழகம் உருவாக்கப்பட்டபோதிலும் அன்றுடன் அக்கழகத்தின் செயற்பாடும் முடிவடைந்துவிட்டது.

தற்போது அவர்கள் இந்த முயற்சிக்கு முன்னோடியாக்கப்பட்டவரைக் கண்டால் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு செல்வதாகவும் அவர் நகைச்சுவையுடன் குறிப்பிட்டார். இன்று எல்லாவற்றுக்கும் பணம்தான் முன்னணியில் நிற்கின்றது. இதன் ஓர் அங்கமாகவே கல்வி வலய மட்டத்திலும் எதிர்பார்ப்புகள் காணப்பட்டமையால் பணக்கொடுப்பனவோ அன்றி சான்றிதழ்களோ கிடைக்காது என்ற நிலையில் யாரும் இதில் ஆர்வம் காட்டவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

20 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்க அணி இலங்கைப் பாடசாலைகள் மட்டத்தில் முதற்தர அணியாகத் தரப்படுத்தப்பட்டிருந்தது. கனிஷ்ட பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைக் கூடப் பெற்றது. தொடர்ந்து முதல் மூன்று இடங்களுக்குத் தேசிய மட்டத்தில் தனது இடத்தைப் பேணி வந்துள்ளது.

## தேசிய மட்ட சதுரங்கப் போட்டிகளில் கலந்துகொள்ளும் நிலை உருவாகவேண்டும்

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டபோதிலும் இடங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 2000ஆம் ஆண்டு யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சிவோதயன் தேசிய மட்டச் சதுரங்கப் போட்டியில் கலந்துகொண்டார்.

கடந்த காலத்தில் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற சதுரங்கப் போட்டிகள் ஐந்து மணித்தியாலங்கள் வரை ஒதுக்கப்பட்டன. ஆனால் இன்று அது ஒன்றரை மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தைக்கூட முழுமையாகப் பயன்படுத்தி விளையாடமுடியாத நிலையில் மாணவர்களின் விளையாட்டுத் தரம் குறைந்துகொண்டே செல்கின்றது.


மணிக்கூட்டுடன் விளையாடும் மாணவி

பெரும்பாலான மாணவர்கள் விளையாட்டின் விதிமுறைகளை முழுமையாக அறிந்துகொள்ளாமல் போட்டிகளில் கலந்துகொள்வதையும் அவதானிக்கமுடிகின்றது. இதற்குத் தீர்வுகாண பாடசாலை மாணவர்களுக்கு சதுரங்கம் தொடர்பான சஞ்சிகைகள், புத்தகங்கள் வழங்கப்படவேண்டும். அதனை வாசிப்பதன் மூலம் மாணவர்களிடையே சதுரங்கம் தொடர்பான அறிவு வளர்ச்சியடையும். சதுரங்கப் போட்டிகளின் போது கடிகாரத்தைப் பயன்படுத்தவும் பழகிக்கொள்ளவேண்டும். பல பாடசாலைகள் போட்டிகளில் கலந்துகொள்கின்றபோதிலும் கடிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை.

இன்று யாழ்.குடாநாட்டின் சதுரங்க விளையாட்டின் தரம் தேசியப் போட்டிகளில் கலந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்றே கூறப்படுகின்றது. எனவே விளையாட்டின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவேண்டிய தேவை எழுந்துள்ளது.

தற்போது சதுரங்க விளையாட்டுப் பாடசாலைகள் மட்டத்தில் வடமராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம் வலயங்களில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதேபோன்று தென்மராட்சி, தீவகக் கல்வி வலயங்களிலும் இவ்விளையாட்டை ஊக்குவிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி செல்வி மணிசேகரன் தரண்யா 2005ஆம் ஆண்டு 8 வயதாக இருந்தபோது கேகாலையில் இடம்பெற்ற கனிஷ்ட பிரிவு தேசிய மட்ட சதுரங்கப் போட்டிகளில் கலந்துகொண்டு எட்டாம் இடத்தைப் பெற்றார்.

இப்போது தனது 11ஆவது வயதில் சதுரங்கப் போட்டிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். 2006ஆம் ஆண்டில் மாகாண, மாவட்டப் போட்டிகளில் அவர் வெற்றியீட்டிய போதிலும் நாட்டுச் சூழ்நிலை காரணமாகத் தேசிய மட்டப் போட்டிகளில் அவர் கலந்துகொள்ளவில்லை.

பாடசாலை மட்டத்தில் சதுரங்கம் தனிநபர் போட்டிகள் ஊக்கிவிக்கப்படவேண்டும். இந்தவகையில் இப்போட்டிகளுக்கான அனுசரணையாளர்களும் உருவாக்கப்பட வேண்டும். ஏனைய போட்டிகளுக்கு கிடைக்கும் அனுசரணைகளின் அளவு சதுரங்கப் போட்டிகளுக்கு கிடைப்பதில்லை. எனவே ஏனைய விளையாட்டுகளுக்கு அனுசரணையாளர்களாகச் செயற்படுபவர்கள் சதுரங்கப் போட்டிகளுக்கும் அனுசரணை வழங்க முன்வரவேண்டும். அத்துடன் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களும்கூட சதுரங்க அறிவை வளர்த்துக் கொள்வதுடன் மாணவர்களுக்கும் அவற்றைப் பயிற்றுவிக்கவேண்டும்.

**— விண்ணன் —**

எனவே பாடசாலை மட்டத்தில் மீண்டும் சதுரங்க விளையாட்டுக்குப் புத்துயிர் ஊட்டுவதன் மூலம் மாணவர்களின் நுண்ணறிவை வளர்ப்பதுடன் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளிலும் கலந்துகொண்டு எமது திறமைகளை நிரூபிக்கமுடியும். இதற்கு கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் முன்வந்து சதுரங்கம் பற்றிய அறிவை மாணவர்களிடத்தில் பரப்பவேண்டும்.

# கொசோவோ பிரச்சினையிலிருந்து இலங்கை அரசு கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள்

## 'டெய்லி மிரர்' பத்திரிகையில் ஆய்வாளர் ஜெகான் பெரேரா தெரிவிக்கும் கருத்து

அனைத்துலக ரீதியில் சிறிலங்கா மீண்டும் பிரதான தலையங்கமாக மாறியுள்ளது. கொசோவோவின் ஒருதலைபட்சமான சுதந்திரப் பிரகடனம் குறித்தான சிறிலங்காவின் நிலைப்பாடே இதற்கு பிரதான காரணமாகும். இந்த நிலைமை அனைத்துலக உறவுகளில் ஒரு தவறான முன்னுதாரணத்தை விளக்கி நிற்பதாகவே சிறிலங்கா அரசாங்கம் கருதுகிறது. கொசோவோவின் சுதந்திரப் பிரகடனம் அனைத்துலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல் என சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்துள்ளது.



பிரிவினைவாதப் போராட்டங்கள் நிலவி வரும் நாடுகள் கொசோவோ நிலைமை குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனத்தின் மூலம பலம் வாய்ந்த நாடுகளது அதிகாரபூர்வ அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனம் தொடர்பான சிறிலங்காவின் கண்டனக்குரல் பல நாடுகளில் எதிரொலித்துள்ளது. ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருந்தது.

சிறிலங்கா அரசாங்கத்தின் யதார்த்த நிலைமை காரணமாகவே அதன் நிலைப்பாடு பல முக்கிய அனைத்துலக நாடுகளுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு கசப்பானதும், அனுபவபூர்வமானதுமான நீண்ட போராட்டம் மற்றும் அனைத்துலக தலையீடு என்பவற்றின் ஊடாக பெறப்பட்டதே அன்றி வெறும் ஏட்டுச் சுரக்காய் அல்ல என்பதே எனது வாதமாகும்.

ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு முன் அனுபவம் உள்ளது. 1992ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முதல்வர் வரதராஜப்பெருமாள் ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்திருந்தார்.

ஆனாலும் இந்த சுதந்திரப் பிரகடனம் தொடர்பாக அனைத்துலகம் தனது பார்வையை செலுத்தவில்லை. இந்தக் கிளர்ச்சி நிர்வாகத்தை சிறிலங்கா அரசாங்கம் உடனடியாகக் கலைத்தது.

மறுபுறத்தில் தமிழர் தாயகத்தின் இறைமையை மறுசீரமைப்பு செய்யுமாறு ஐக்கிய நாடுகளிடமும், அனைத்துலக சமூகத்திடமும் விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அத்தகையதொரு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும்போது சிறிலங்காவில் சுதந்திரப் பிரகடனம் தொடர்பான நிலைமை மிக மோசமான போக்கையே காட்டி நிற்கின்றது.

*அடக்குமுறைத் தீர்வுகள*

சில நாடுகளில் கிளர்ச்சியாளர்களின் போராட்டங்கள் சிறிலங்காவை விட மிக மோசமான நிலையிலேயே காணப்படுகிறது.

ரஷ்யா மற்றும் சீனா ஆகிய பாரிய நாடுகளுடன் ஒப்பிடும்போது சுதந்திரப் பிரகடனமொன்றின் மூலம் பிளவுபடக்கூடிய அதிக அச்சுறுத்தல் சிறிலங்கா அரசாங்கத்திற்கே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையின் குறிப்பிட்ட ஒரு பகுதியின் கட்டுப்பாட்டை தம்வசம் வைத்திருக்கிறது. பிரிவினைவாதிகளினால் இலங்கையின் இறைமைக்கு விடுக்கப்படும் சவால்களை எதிர்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் அரசாங்கத்திற்கு உள்ளது என்பதை மறுக்கமுடியாது.

பாரிய இராணுவப் படைபலம் மற்றும் வலுவான பொருளாதார நிலையையுடைய ரஷ்ய, சீனா விவகாரங்களில் தலையீடு செய்ய அனைத்துலக நாடுகள் முன்வராது என்பதனை விளங்கிக்கொள்ளவேண்டும்.

*பிளவை தடுத்து நிறுத்த*

பொருளாதார மற்றும் இராணுவ ரீதியில் வலுவிழந்து காணப்படும் அரசாங்கமொன்றினால் அனைத்துலகத்தின் கவனத்தை தன்பால் முழுமையாக ஈர்க்கமுடியாது என்பதையே சேர்பிய அரசாங்கத்தின் தற்போதைய நிலைமை தெளிவுபடுத்தி நிற்கின்றது. குறைந்தபட்சம் அனைத்துலகத்தின் நன்மதிப்பு இருந்தால் மட்டுமே நாடு பிளவுபடுவதனை தடுத்து நிறுத்த முடியும்.

தொடக்கத்தில் சேர்பியாதான் வலுவான நிலையிலேயே காணப்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கொசோவோ தனிநாடாக பிளவுபடுவதனை அனுமதிக்கவில்லை.

உண்மையில் கொசோவோ விடுதலை இராணுவத்தினரை அமெரிக்க அரசாங்கம், ஒரு தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமாக அறிவித்திருந்தது.

*சேர்பியா விட்ட தவறுகள்*

எனினும், சேர்பிய அரசாங்கம் இரண்டு பிரதான காரணிகளில் அவதானம் செலுத்தத் தவறியது.

யுகோஸ்லாவிய அதிபர் டிடோவினால் தூர நோக்குடன் கொசோவோவிற்கு வழங்கப்பட்டிருந்த சுயநிர்ணய உரிமைகளை சேர்பியா தொடர்ந்து பேணவில்லை.

1974ஆம் ஆண்டு அரசியல் சாசன திருத்தங்களின் அடிப்படையில் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, காவல்துறை, நீதிமன்றம் போன்ற அதிகாரங்கள் கொசோவோ சுயநிர்ணய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

எனினும் சேர்பியாவின் அதிபர் மிலொசொவிக்கின் ஆட்சிக்காலத்தில் கொசோவோவின் அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

குறிப்பாக சுயநிர்ணய அரசாங்கத்தை இரத்துச் செய்து, சேர்பியப் படையினரை கொசோவோவில் நிலை நிறுத்தினார்.

இரண்டாவது, கொசோவோவை தமது இறைமையின்கீழ் வைத்திருக்க முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போதும் ஏனைய சூழ்நிலைகளின்போதும் மனித உரிமைகள் தொடர்பாக உரிய அவதானம் செலுத்தப்பட்டது என்பதனை அனைத்துலக சமூகத்திடம் நிரூபிக்க சேர்பிய ஆட்சியாளர்கள் தவறினர்.

மாறாக, இந்த இன முரண்பாட்டு போராட்டங்களின் போது பாரிய மனித அவலங்களே அரங்கேறறப்பட்டன.

சேர்பிய அரசாங்கத்தின் கொசோவோ விடுதலை இராணுவத்தினருக்கு எதிரான போராட்டப் பிரகடனம் குறிப்பிட்ட இனத்திற்கு எதிரான போர்ப்பிரகடனமாக காலப்போக்கில் மாறியது.

*ஒத்திவைக்கப்பட்ட உதவிகள்*

சிறிலங்கா அரசாங்கமானது தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொண்டு, கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்டெடுப்பதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளது. இந்த முன்நகர்வு எதிர்பார்க்கப்பட்டதனை விட மிக குறைந்தளவு வேகத்திலேயே முன்னெடுக்கப்படுவதுடன், பாரிய மனித மற்றும் பொருளாதார இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ச் சமூகத்தில் கடத்தல்கள் மற்றும் கொலைகள் பயங்கரவாதமயப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான மஹிந்தவின் ஆணைக்குழுவில் அங்கம் வகித்த அனைத்துலகப் பிரதிநிதிகளின் துரித வெளியேற்றத்தின் காரணமாக அனைத்துலக தரத்திலான மனித உரிமை மீறல் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாத துரதிரஷ்டவசமான நிலைமை தோன்றியுள்ளது.

நில ரீதியான கட்டுப்பாட்டின் மூலம் நாட்டின் இறைமைக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்பதே சேர்பிய விவகாரத்தின் ஊடாக நாம் கற்றுக்கொள்ளக் கூடிய பாடமாகும். மிக வலுவான சேர்பிய இராணுவம் கொசோவோவின் கட்டுப்பாட்டை மீளப் பெற்றுக்கொண்டது.

எனினும், கொசோவோவில் நிகழ்த்தப்பட்ட மிக மோசமான மனித உரிமை அவலங்கள் காரணமாக மேற்குலக நாடுகள் தலையீடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதுடன், இறுதியில் சேர்பிய இராணுவத்தினரின் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டன.

இறைமை உள்ளிட்ட அனைத்துலக சட்டங்களை புறந்தள்ளி விட்டு கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்திற்கு பல நாடுகள் அங்கீகாரம் வழங்கியுள்ளன. பிராந்தியத்தில் நிலைத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற யதார்த்த நிலைமை யின் அடிப்படையிலேயே இந்த நாடுகள் அங்கீகாரமளித்துள்ளன.

இதனால்தான் சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அரசியல் தீர்வு ஆகிய இரண்டு அடிப்படை ஏதுகளை மையமாக வைத்து தமது இறைமை தந்திரோபாயத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஒருதலைப்பட்சமான இறைமை கோட்பாடுகள் மூலமோ அல்லது முழுமையான இராணுவ முன்னகர்வின் மூலமோ இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படமுடியாது.

அனைத்துலக சமூகத்தின் ஒத்துழைப்புடனேயே இலங்கையின் ஒருமைப்பாட்டை பேண முடியும் என்பது யதார்த்த ரீதியாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெற்பேலியில் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்1

வீட்டுக்காரர் இல்லாத வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து ஒரு தொகைப் பணத்தையும் 72 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் கெற்பேலி பகுதியில் இடம்பெற்றது.

திருட்டுத் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்து கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர். சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## சைவமணி மருதப்பிள்ளை நினைவாக மலர் வெளியீடு

சைவமணி சி.மருதப்பிள்ளை நினைவாக ஓராண்டுப் பூர்த்தியன்று ஆசிரியரின் பணிகளை வெளிப்படுத்தும் மலர் ஒன்றை வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியரால் வெளியிடப்பட்ட சமய நூல்களின்சிறப்பை வெளிப்படுத்தும் கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு, பஞ்ச புராணத் தொகுப்பு ஆகியவை மலரில் இடம் பெறவுள்ளன. (202-68)

## வலி.தென் மேற்கில் கசிப்பு உற்பத்தி தீவிரம்

வலி.தென் மேற்கு, மார்ச்.01

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை என்பன மிகவும் அதிகரித்துள்ளன. இதனால் சமூக விரோதச் செயற்பாடுகளும், குடும்பப் பிரச்சினைகளும் பல இடங்களில் தலை தூக்கியுள்ளதாகப் பலரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இந்தக் கசிப்பு உற்பத்தி, விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். மதுவரித் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இணைந்து தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-135)

## சேவை நலன் பாராட்டு



**திரு.பொ.நாகரத்தினம்**

*(அதிபர் சேவை: 2-I)*

34 வருட காலக் கல்விப்பணியில் எமது பாடசாலையில் அதிபராகக் கடந்த 9 வருடங்கள் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் அவரது சேவையைப் பாராட்டி ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**

யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம், மல்லாகம்.

(சி/551635)

## அறிவித்தல்

**கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) கோப்பாய்**

**கிளைக்குழுக்களை தெரிவுசெய்தல் 08.03.2008**

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20.02 இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காகக் கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் இவ்வட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம்: 08.03.2008 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

**கூட்டம் நடைபெறும் இடங்களின் விவரம் வருமாறு:**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 240 | கோப்பாய் வடக்கு | றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கோப்பாய் வடக்கு |
| 02. | 241 | இருபாலை | விக்கினேஸ்வர சனசமூக நிலையம், இருபாலை |
| 03. | 242 | நீர்வேலி வடக்கு | கலைஒளி சனசமூக நிலையம், நீர்வேலி வடக்கு |
| 04. | 243 | நீர்வேலி தெற்கு | ஸ்ரீபரமேஸ்வரி சனசமூக நிலையம், நீர்வேலி தெற்கு |
| 05. | 244 | ஊரெழு | காந்திஜி சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு |
| 06. | 245 | அச்செழு | வளர்மதி சனசமூக நிலையம், புலசிட்டி, அச்செழு |
| 07. | 247 | டிப்போ | உதயசூரியன் சனசமூக நிலையம், செல்வபுரம் |
| 08. | 249 | கட்டப்பிராய் | சரஸ்வதி சனசமூக நிலையம், கட்டப்பிராய் |
| 09. | 250 | கோப்பாய்ச் சந்தி | கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்க தலைமைக் காரியாலயம் |
| 10. | 252 | பொக்கணை | முத்தமிழ் சனசமூக நிலையம், பொக்கணை. (சி/551624) |

பருத்தித்துறை வீதி, கோப்பாய். **கூட்டுறவுச் சேவையிலுள்ள செயலாளர்.**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 10 . 02 . 1950



இறைவன் அடியில் 04 . 03 . 2005

**அமரர் S.K.சிவபாலன்**

**B.A., M.A., Phd.,M.Phill.**

(பண்ணிசைக் கலாநிதி, சங்கீத வித்துவான், இசைப்பேராசிரியர்- அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்- இந்தியா)

திதி: அபரபக்க நவமி (01.03.2008)

*விருதுகள் 29உம், ஆய்வுநூல்கள் 07உம் (திருமுறை ஒலிநாடாக்கள் 2உம்) வெளியீடு செய்து சாதனை பல படைத்த பேராசானே இன்று ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆறுமோ எம் துயரம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல சிவகாமி உடனுறை சிவசிதம்பரேஸ்வரரை வேண்டிநிற்கின்றோம்.*

பாடசாலை ஒழுங்கை,
சித்தன்கேணி.

கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை. (71298)

**சகோதரிகள், சகோதரர், மைத்துனர், மருமக்கள்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## திருநாவுக்கரசு பஞ்சாட்சரநாதன்

**(வரதன்-பஞ்சு)**

**தோற்றம்: 04.10.1964 மறைவு: 31.01.2008**

குறியாகக் குண்டு யம(ன்)
வெறியினிலே வதைபட்டு
நெறிபிறழும் சாவுனக்கு
நேர்ந்ததுவோ எம் நாதா!
உறவாடும் ஜனரஞ்சா
உரமான உயிர் அன்பா!
மறவாது உனை நாளும்
மனதிருத்தி வைக்கின்றோம்.

சித்திவிநாயகன் தன்
சினேக பக்தனுந்தன்
சத்தம் அடங்குதற்கு
சம்மதம் சொன்னதேனோ?
உத்தம உண்மையனே
உறவாடும் இனிமையனே
அஸ்தமன மாகவில்லை- எம்
அருகினில் நீ இன்னுமின்னும்......

*பாடசாலை ஒழுங்கை,*
*கோண்டாவில்.*
*0602217837.*

*ஆறாத்துயரில்:*
**அன்பு மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

(71561)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் இராணுவத் திறமை அலட்சியப்படுத்தக் கூடியதல்ல!

கொழும்பு,மார்ச்.1

இலங்கையின் தசாப்தகால மோதலின் புதிய கட்டத்தில் இலங்கை அரசுத் தரப்பின் கை மேலோங்கியுள்ள போதிலும் விடுதலை புலிகளின் இராணுவத் திறமையை அலட்சியம் செய்ய முடியாது. அப்படி அலட்சியம் செய்வது புத்திசாலித்தனமானதல்ல என 'ரோய்ட்டர்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்த பின்னர் - ஆறு வருட யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து முறைப்படி விலகிய பின்னர் - அதுவரை வன்முறைகளைப் பதிவதில் ஈடுபட்டுவந்த கண்காணிப்புக் குழுவை அரசு வெளியேற்றியது.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு, மனித உரிமை மீறல்களில் இராணுவத்தின் சில பிரிவினர் ஈடுபட்டுவந்தனர் எனக் குற்றம் சாட்டியிருந்தது.

கண்காணிப்பாளர்கள் இல்லாத நிலையாலும் -

ஐக்கிய நாடுகளின் கண்காணிப்புக் குழுவை அரசு நிராகரித்துள்ளதாலும் -

சர்வதேச ரீதியில் அதிகளவு தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாலும் -

மோதல்களில் ஏற்படும் உயிரிழப்புகள் போன்ற விவரங்கள் குறித்து சுயாதீன தகவல்கள் இல்லாத நிலைமை காணப்படுகிறது.

### சமாந்தரப் பிரசார யுத்தம்

இதற்கு மாறாக, இரு தரப்பும் எதிரிகளின் இழப்பை அதிமாகவும் தமது இழப்பை குறைத்தும் தெரிவிக்கும் சமாந்தரப் பிரசார யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இராணுவம், பல புலிகள் கொல்லப்பட்டனர் எனத் தொடர்ச்சியாக அறிக்கைகளை வெளியிடுகின்றது. அதே வேளை, அந்த அறிக்கைகளில் இராணுவத்தின் உயிரிழப்புக் குறைவாகவே காணப்படுகின்றது. மேலும், தமது அறிக்கையை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் சடலங்களைக் காண்பிப்பதில்லை. மாறாக புலிகளின் தொடர்பாடல் செய்திகளை இடைமறித்து கேட்டதில் அப்படித் தெரியவந்ததாக அரசுத் தரப்புக் கூறுகின்றது.

## 'ரோய்ட்டர்' செய்தி ஆய்வில் கணிப்பு

விடுதலைப் புலிகள் இவ்வாறான எண்ணிக்கைகள் குறித்து பரிகசிக்கின்றனர்.

2006இற்கு பின்னர் 6,486 புலிகளும், 1,196 இராணுவத்தினரும் 982 பொது மக்களும் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கும் பாதுகாப்பு வட்டாரங்கள் 5,000 புலிகளே மீதமுள்ளனர் எனவும் கூறுகின்றன.

புள்ளிவிவரங்களை அடிப்படையாக வைத்து யுத்தத்தின் வெற்றி தோல்வியை மதிப்பிட முடியாது எனத் தெரிவிக்கும் இலங்கை இராணுவச் செய்தியாளர் ஒருவர், கொல்லப்பட்டவர்கள் குறித்த புள்ளி விவரங்கள் அர்த்தமற்றவை என்கிறார்.

எனினும், அரசு தாங்கள் வெல்வதை புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன எனத் தெரிவிக்கின்றது.

படையினர் முன்னேறிச் செல்வதை இது புலப்படுத்துகின்றது எனத் தெரிவிக்கும் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர், இராணுவம் தனது உயிரிழப்புகளைக் குறைத்துக் காட்டுகின்றது, படையினரின் சடலங்கள் இரகசியமாகப் புதைக்கப்படுகின்றன என்றெல்லாம் தெரிவிக்கப்படுவதை மறுக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் உயிரிழப்பு குறித்த பிரசாரம் மஹிந்த ராஜபக்ஷ அரசு மீதான நம்பிக்கையைத் தொடரச் செய்வதற்கு அவசியமாகவுள்ளது.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என்பதைத் தென்பகுதி ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்காக பொருளாதார ரீதியில் தியாகம் செய்யவும் அது தயாராகவுள்ளது என்பதை சுட்டிக்காட்டும் மாற்றுக் கொள்கை நிலையத்தின் பாக்கியசோதி சரவணமுத்து, எனினும் அரசு வெற்றி நிச்சயமாக வெகு விரைவில் சாத்தியம் என்பதை நிருபிக்கும் வரையே இது தொடரும் என்கிறார்.

கொழும்பிலிருந்து 330 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சியை இதற்காக அரசு கைப்பற்ற வேண்டும் என்கிறார் அவர்.

### இராணுவ வெற்றிகள் வீணடிக்கப்படலாம்

பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்துள்ளதுடன், வர்த்தகர்கள் புதிய முதலீடுகளை இடை நிறுத்தியுள்ளனர். உல்லாசப் பயணிகளின் வருகையும் குறைவடைந்துள்ளது.

அரசு பணவீக்கத்தை குறைப்பதற்கு கடும் போராட்டத்தை மேற்கொண்டுள்ளது. பாதுகாப்பு செலவினம் அதிகரித்துள்ளமை அதற்கு மேலும் அழுத்தத்தை கொடுத்துள்ளது.

எனினும், இராணுவப் பயிற்சி மற்றும் தந்திரோபாயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அதிகளவு சூட்டாதரவு ஆகியவற்றுடன் அரசு விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர்.

எனினும், தமிழ் சிறுபான்மை சமூகத்திற்கு உண்மையான அரசியல் அதிகாரப் பகிர்வு இல்லாமல் இராணுவ வெற்றிகள் வீணடிக்கப்படலாம்.

குறிப்பிடத்தக்க இராணுவ இழப்புகளால் விடுதலைப் புலிகள் பலவீனமாக உள்ளமை தெளிவு. விமானப் பலமே இரு பக்கத்திற்கும் இடையிலான வித்தியாசத்திற்கு காரணம் என வெளிநாட்டு இராஜ தந்திரியொருவர் தெரிவிக்கின்றார்.

விடுதலைப் புலிகளை சோர்வடையச் செய்யும் இராணுவ நடவடிக்கைக்கு அவசியமான ஆட்பலம் இராணுவத்திடமுள்ளது. உடனடியாக அவர்கள் தோல்வியைத் தழுவுவதை நாங்கள் காணப்போவதில்லை. எனினும், அவர்கள் முடக்கப்படும் நிலைமை உருவாவதை நாங்கள் அனுமானிக்கலாம் - என்கிறார் அவர்.- இப்படி ரோய்ட்டர் மேலும் தெரி வித்தது. (உ)

# மட்டு. தேர்தலுக்கு முன் ஆயுதக் குழுக்களை அகற்றக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு

## 'பவ்ரல்' அமைப்பு அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு,மார்ச்.1

மட்டு. உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் அங்குள்ள சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் அனைத்தையும் அகற்றும்படியும் வேட்பாளர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதை உடன் தடுக்கும்படியும் சம்பந்தப்பட்டோருக்கு உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

நீதியான, சுயாதீனமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் ('பவ்ரல்' அமைப்பின்) சார்பில் அதன் தலைவர் கிங்ஸிலி றொட்ரிகோ, பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சி ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்தனர்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன், மட்டக்களப்பு அரச அதிபர் ஜி.ஏ. எஸ்.அருமைநாயகம், மட்டக்களப்பு உதவித் தேர்தல் ஆணையாளர் பி.கிருஷ்ண நாதலிங்கம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஹஸன் அலி எம்.பி., ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் ராஜநாதன் பிரபாகரன், பொதுஜன ஐக்கிய முன்னணியின்செயலாளர் நாயகம் சுசில் பிரமேஜயந்த, தமிழமக்கள் விடுதலைப் புலிகளின் செயலாளர் நாயகம் ஈ.எஸ். கைலேஸ்வரன், சட்டமா அதிபர் ஆகியோர் உட்பட 35 பேர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவில் கோரப்பட்டுள்ள பிரதான விடயங்கள் வருமாறு:-

* சுதந்திரமாகவும், நீதியாகவும் தேர்தல் நடத்த முடியாத இடங்களில் தேர்தலை ரத்துச்செய்யுமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுங்கள்.
* சகல் சட்டவிரோத ஆயுதக் குழுக்களையும் உடன் நிராயுத பாணிகளாக்கவும்-
* சகல வேட்பாளர்களையும் ஆயுதங்கள் இன்றி நடமாடுவதை உறுதிப்படுத்தவும் -
* அரசு சொத்துக்களை தரப்புகள் பயன்படுத்துவதைத் தடுக்கவும் -
* சகலருக்கும் பாதுகாப்பை உறுதிப் படுத்தவும் -

விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உத்தரவிடுங்கள்.

* சுதந்திரமாகத் தேர்தல் நடத்த முடியாமல் போகும் இடங்களில் தேர்தலை ரத்துச் செய்யுமாறு தேர்தல் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுங்கள். (சி)

# இந்தியா, மாலைதீவின் போர்க் கப்பல்கள் கொழும்புக்கு வருகை

கொழும்பு,மார்ச்.1

இந்தியா மற்றும் மாலைதீவு நாடுகளிலிருந்து இரு போர்க் கப்பல்கள் நேற்றுமுன்தினம் கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்திருக்கின்றன.

இந்தியக் கரையோரக் காவற்படையின் படகான 'சுகன்யா' மாலைதீவு நாட்டின் போர்க்கப்பலான 'ஹிராவி' ஆகியனவே இங்கு வந்தடைந்துள்ளன.

நல்லெண்ண அடிப்படையிலேயே இந்தக் கப்பல்கள் துறைமுகத்தை வந்தடைந்திருக்கின்றன என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (க -03)



பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய சாரண மாணவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகப் புதிய கட்டடப் பிரதேசத்தைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்தனர். பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரனுடன் துப்பரவுப் பணியில் ஈடுபட்ட சாரண மாணவர்களைப் படத்தில் காணலாம். (218)

# இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் அனுமதி கோரி 4 முஸ்லிம்கள் வழக்கு

## அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

கொழும்பு,மார்ச்.1

கொழும்பு, பம்பலப்பிட்டி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதில் முஸ்லிம் என்ற காரணத்துக்காகத் தங்களின் பிள்ளைகள் புறக்கணிக்கப்பட்டனர் எனத் தெரிவித்து அதனை ஆட்சேபித்து நான்கு முஸ்லிம் மாணவிகளின் பெற்றோர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல்மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

அந்த மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்க, நிமால் காமினி அமரதுங்க, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த மனுக்களைப் பரிசீலித்த பின்னர் அவற்றை விசாரணைக்கு ஏற்றது.

மனுக்களில் கல்வி அமைச்சின் செயலாளர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் ஆகியோர் உட்பட 13 பேர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

முதலாம் தரத்துக்கு 120 மாணவிகளைச் சேர்க்கும்போது முஸ்லிம்கள் என்ற காரணத்துக்காகத் தாங்கள் ஒதுக்கப்பட்டமை நியாயமற்ற செயல் என மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.(உ)

# வெல்லாவெளியில் இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,மார்ச்.1

மட்டக்களப்பு,வெல்லாவெளிப் பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறப்படும் இளைஞர் மீது நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்தார் எனப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிவிலியன் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே விசேட அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து இவர் மீது தாக்குதல் நடத்தினர் என்று படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது ரி - 56 ரக துப்பாக்கி - 01, கிளைமோர் - 01 டிற்றனெற்றர் - 01, கைக்குண்டு - 01, ரி - 56 ரக துப்பாக்கி மகஸின் - 03, வயர் சுருள் - 01,பற்றரி - 01 என்பவற்றை மீட்டுள்ளனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

# பிறருக்கு நல்வழிகாட்ட நற்செய்தி

ஒரு குரு தனது குருத்துவ வெள்ளி விழா வை நினைவு கூர்ந்தார். மக்கள், அவரது குடும்பத்தார், குருக்கள், பாராட்டுதலுக்குரிய அவரது அர்ப்பண் வாழ்வை நினைத்து மகிழ்ந்தார்கள், பாராட்டினார்கள்.

அன்றைய தினம் ஒரு சில குருமட மாணவர்கள் அர்ப்பணவாழ்வின் வெள்ளிவிழா நாயகனிடம் ஒரு கேள்வி எழுப்பினார்கள், ''சுவாமி, இதுவரை காலமும் உங்கள் அர்ப்பண வாழ்வுக்கெதிராகப் பாவச்சோதனைகள் உங்களுக்கு ஏற்படவில்லை என்று அப்போது அக்குரு சொன்னார், ''ஆம். நான் தினமும் இறை அருளிற்காகவும், இரக்கத்துக்காகவும், மன்றாடுவேன்.'' குருமட மாணவர்கள் விடவில்லை, ''அருள், இரக்கம் என்கிறீர் களே இவைகள் என்ன? இவற்றுக்காக உங்கள் மன்றாட்டங்கள் என்ன?'' என்றனர். குரு சொன்னார் இதுவே என்னுடைய அன்றாட செபம்: ''ஆண்டவராகிய இயேசுவே, என் மீது இரக்கமாயிரும். உமது அருளை எனக்கு நிறைவாகத்தாரும்.''



நமது நேர்மையான வாழ்வு, நமது எடுத்துக் காட்டான செயல்கள், நெறி தவறாத ஆண்டவர் இயேசுவின் எமது சீடத்துவ அர்ப்பணிப்பு, இறை வனுக்காய் அனைத்தையும் நன்றாகவே செய் யும் நல்ல உள்ளம், எனது இதயம், உள்ளம், ஆற்றல் அனைத்திலும் இறைவனையே தேடும் வாஞ்சை... இப்படியாக நாம் வாழும் பொருட்டே அழைக்கப்பட்டுள்ளோம். இவ்விதமான ஓர் உண்மை வாழ்வு என்னில் இருந்தால், அது 'சுய புகழ்ச்சியை' என்னில் தூண்டிவிடாது, 'நானே சிறப்பானவன்' எனும் எண்ணத்தை எனக்குத் தராது. 'என்னை விட்டால் யாரும் இல்லை' எனும் மமதையை எனக்குத் தராது. மாறாக நன்று பூத்துக்குழுங்கிய நெற்கதிர் சாய்ந்து நிற்பது போல், நாமும் மற்றவருக்காய் எதைத்தருவோம். ''நிறை குடம் தழம்பாது'' என்பதற்கமைய, வெற்றுக் கூச்சலோ, வெற்றுடாம்பீகாமோ இன்றி நிறைவாய் வாழ்வோம். வாழ்விப்போம்.

''கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்.'' (லூக் 18:13) எனும் வேண்டுதல், எனக்காகவும், எம்மவர்க்காகவும் நான் இறைவனைப் பணிவோடு வேண்டும் செபமாக அமையலாமல்லவா? நான் என்னை பிறரோடு 'ஒப்பிட்டு' நோக்கி என்னை உயர்வாகக் கருதினாலும் சரி, தாழ்வாகக் கருதினாலும் சரி அவை எனது முழுவளர்ச்சிக்கு உதவாது என்பதை நினைப்போம். தன்னைப்பற்றி அறிந்து கொண்டு, தன்னையும் சரியான பாதையில் வாழவைத்து, பிறருக்கும் நல்வழி காட்டவே இன்றைய நற்செய்தி நமக்கு சவால் விடுக்கின்றது.

- சகோ.துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனை

வைமன் றோட்டில் எடிசன் அக்கடமிக்கு அண்மையில் நல்ல நிலையில் உள்ள 2 பரப்பு வீடு, வளவு உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்.
தொடர்பு : இல.15,சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குழி, தொ.பே. 0776108665

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.



## தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம்,மார்ச்1

உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றப்பட்ட வைக்கோலின் மீது அமர்ந்து வந்த குடும்பஸ்தர் தவறிவீழ்ந்து பலியானார்.

இச்சம்பவம் சுமார் இருவாரங்களுக்கு முன்னர் மந்துவிலில் இடம்பெற்றது. மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசலிங்கம் (வயது-44) என்பவரே மரணமானவராவார். (202-207)

## தென்மராட்சியின் மைந்தன்
## திரு. வை.இராசரத்தினத்துக்கு
## வடமராட்சியின் வாழ்த்துகள்



சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் ஓய்வுபெறுவதையிட்டு நாளை (02.03.2008) ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும் பாராட்டு விழாவில் எம் இனிய வாழ்த்துகளையும் விழாவினை நடத்திக் கொண்டிருக்கும் தென்மராட்சி வாழ் மக்களுக்கு எங்கள் அன்பினையும் அரச சேவையில் ஓய்வு[illegible]ாலும் மக்கள் சேவையில் அ[illegible]ல் அமைத்து படிக்கல் சமைத்து முடிகட்டி முத்துக்கல் பதிக்க அன்புடன் வாழ்த்தும்..

| | | |
|---|---|---|
| திரு. திருமதி<br>சபா. ரவீந்திரன்<br>(சட்டத்தரணி)<br>தும்பளை,<br>பருத்தித்துறை | திரு. திருமதி<br>சபா. சபாரத்தினம்<br>ஆத்தியடி,<br>பருத்தித்துறை<br>(மகள் குடும்பம்) | திரு. திருமதி<br>சபா. சத்தியசீலன்<br>(முன்னாள் ஹாட்லிக் கல்லூரி<br>ஆசிரியர், பருத்தித்துறை)<br>(கனடா). |

(71476)

## இணை மருத்துவ விஞ்ஞானத்துறையில் மருந்தாக்கத்துறை முக்கிய பாடநெறி

( நேற்றைய தொடர்ச்சி)

நாட்டிலுள்ள குடித்தொகைக்கிணங்க தாதியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்றது. அதுமட்டுமல்லாது பல்கலைக்கழகங்களுடாகவே தாதியியல் பட்டதாரிகளை உருவாக்கும் பட்சத்தில் உள்நாட்டு வேலைவாய்ப்பு மட்டு மல்லாது சர்வதேச தாதியர் கேள்விக்கு எமது பட்டதாரிகளை வழங்குவதற்கு வாய்ப்பும் உண்டாகும். எனவே புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தாதியர் கற்கை நெறியினை பயிலத் தகுதியானவர்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துவார்கள் என நம்பலாம்.

மேலும் இத்துறைகளை மேற்பட்டப் படிப்புகளை மேற்கொள்ளவும் ஆராய்ச்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் சிறப்பான வாய்ப்புகளுண்டு. அத்துடன் உலக சுகாதார நிறுவனம் உட்பட பல சர்வதேச தாதியர் தொடர்பான நிறுவனங்களில் உயர் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புகள் உண்டு.

**இணை மருத்துவ விஞ்ஞானத்துறையில் மருந்தாக்கவியல்(Pharmacy)**

இணை மருத்துவ கற்கை நெறியில் மருந்தாக்கவியல் பாடநெறி முக்கியத்துவம் வாய்ந்த அலகாகும். மருந்துகளை உற்பத்தி செய்வதுதொட்டு நோயாளிகளுக்கு மருந்துகளை தேவையான தகவல்களோடு வழங்குவது வரை இத்துறை விசாலித்துக் காணப்படுகின்றது. அதாவது மருந்தாக்கக் கைத்தொழில், வைத்தியசாலைகளில மருந்துகளை வழங்குதல, மருந்தாக்கவியல் தொடர்பான அரச மற்றும் தனியார் நிறுவனங்களைச் செயற்படுத்துதல், உயர் கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற பலவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்துறையோடு தொடர்புடைய தொழில்கள் பலவாகக் காணப்படுகின்றன. இப்பட்டப்படிப்பை மேற்கொள்வதனூடாக சிரேஷ்ட மருந்தாளர், உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டாளர், மருந்து தொடர்பான விசேட நிபுணத்துவர், அனுமதி பெற்ற மருந்தாளர், மருந்துக்களை சந்தைப்படுத்துவதற்கான ஆராய்ச்சியாளர், உயர் கல்வித்துறையில் ஆராய்ச்சி செய்வதற்கான வாய்ப்புகள் போன்ற தொழில்கள் இந்த மருந்தாக்கவியற் பட்டப்படிப்பினூடாக பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. மேலும் மருந்தாளர்களுக்கான ஆலோசகராகவும் வைத்தியசாலை மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், மருந்தாக்கவியற் கைத்தொழில் மையங்களில் சிரேஷ்ட உத்தியோகத்தர்களாக வருவதற்கும், புதிய மருந்தாளர்களை பயிற்றுவிப்பதக்கும், இந்த மருந்தாக்கவியற் பட்டப்படிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தகைய பன்முக நோக்கங்கள் கொண்ட மருந்தாக்கவியல் பட்டப்படிப்பு இன்றைய இளம் சமூகத்தினருக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேற்குறித்த இணை மருத்துவ அலகுகளும், உயர் கல்வி பெறும் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பயின்ற மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளன என்பதில் ஐயமில்லை. இத்துறைகளை மாணவர்கள் தெரிவு செய்து கற்கும் பட்சத்தில், ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. (முற்றும்)

**இணை மருத்துவ விஞ்ஞானத்துறை**
**மாணவர் ஒன்றியம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,**
**யாழ்ப்பாணம்.**


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

*Diploma in Hardware Engineering*
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing
❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio
❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio
❖ Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Computerized Accounting*
ACCPAC + QuickBooks + MYOB ஆகிய முன்னணி
Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :03/03/2008 09.00AM


## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மார்ச்1

ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் 'சொண்ட்' நிறுவனம் பிரதேச செயலகங்களின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு ஆணையாளர் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சமூக அணிதிரட்டல் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளது.

நாளை தொடக்கம் எதிர்வரும் வியாழக் கிழமை வரை 5 நாள்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது. (202)

## விசேட கல்வி விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்1

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவுடன் இணைந்து சுன்னாகம் வாழ்வகம், உடுவில் ஆர்க் பாடசாலை ஆகியன விசேட கல்வி விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியுள்ளன.

இந்நிகழ்வுகள் அண்மையில் அராலி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் விசேட கல்வி முகாமையாளர் நி.முருகானந்தன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் விழிப்புலன் இழந்த மாணவர்களின் இசைகானமும் ஆர்க் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வும் மற்றும் ஆற்றலை வெளிப்படுத்துவனவாக நடத்தப்பட்டன.

வளவாளர்களால் விசேட உதவி தேவைப்படுவோர்கள் பற்றியும் அவர்களின் கல்வி மேம்பாடும் சமுகத் தொடர்பு பற்றியும் உட்படுத்தல் கல்வி பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளின் உள்வருகையை கட்டுப்படுத்தல் அவர்களை சமுகத்துடன் இணைத்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (202)


**IBMS**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
பிரிவு I : 28.02.2008 } பகல் 10.00 மணி
பிரிவு II : 01.03.2008
பிரத்தியேக Online வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
Head Office: # 209, மானிப்பாய் வீதி, [illegible], யாழ்ப்பாணம்.
T.P 021 222 8060
Branches : * நெ.ம.ம.வி வீதி, நெல்லியடி,
* சங்கத்தானை, சாவகச்சேரி.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 05 . 10 . 1937



உதிர்வு 31 . 01 . 2008

**திருமதி பர்வதாதேவி பாலசிங்கம்**
(அச்சுவேலி)

கடந்த 31.01.2008 இல் சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (01.03.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'அன்பகம்',*
*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

குடும்பத்தினர்.

(71566)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 17 ★ 03 ★ 1926



மறைவு 31 ★ 01 ★ 2008

**அமரர் சபாபதி இராமலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த (31.01.2008) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.02.2008 வியாழக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிரியைகள் இன்று (01.03.2008) சனிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் த[illegible]ள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

குடும்பத்தினர்.

(71395)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**கந்தன்**
**வைத்திலிங்கம்**
**(விதானையார்)**

| கண்மலர்வு | கண்மூடல் |
|---|---|
| 16.08.1950 | 13.03.2007 |

திதி : [illegible] 01.03.2008

*கண்ணீரில் ஓராண்டு கரைந்து மறைந்ததப்பா!*
*கண்முன்னே நீரில்லை நினைவு தொடருதப்பா!*
*எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்*
*இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்*
*உறுதியுடன் சங்கிலி வைரவரின் திருவடியைப் பற்றி நின்றீர்*
*பாசத்தின் பொக்கிஷமே பரவுகிறோம் சாந்திபெற*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (01.03.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

❋ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*பாரதி வீதி,*
*பத்தமேனி, அச்சுவேலி.*

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிமார்.

(71553)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தீர்வுக்கு இணங்கி வராத தென்னிலங்கை தீர்வு மறுப்பில் மட்டும் இணைந்து வரும்

இலங்கையின் சகல சமூகங்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நீதியான தீர்வொன்று குறித்துப் புதிதாகச் சிந்திக்கும்படி இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தவரைப் பார்த்துக் கோரியிருக்கின்றது பிரிட்டன்.

இதேசமயம், இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான வழி வகைகளை ஆராய்வது என்ற நோக்கத்தின் பெயரில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசும் நிகழ்வும் இடம்பெற்றிருக்கின்றது.

பிரிட்டன் கோருகின்றமை போல இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு குறித்துப் புதிதாகச் சிந்திப்பதை நோக்கமாகக் கொண்டதுதான் இந்தச் சந்திப்பா என்பது தெரியவில்லை.

ஆனால் இந்தச் சந்திப்பின் உள்நோக்கம் வேறு இலக்குக் கொண்டது என இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கூறியிருக்கின்றார்.

''தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்கி, கணிசமான அதிகாரங்களைப் பகிரும் நீதியான தீர்வு ஒன்றைக் காணும் நோக்கத்துக்காக அவர்கள் இணையவில்லை. மாறாக, தமிழர்களுக்குத் தற்போது இருக்கக்கூடிய கொஞ்ச, நஞ்ச அதிகாரங்களையும் பறித்து, தமிழ்த் தேசியத்தை ஒடுக்கி, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அடக்கும் கைங்கரியத்துக்காகவே எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் ஜனாதிபதி மஹிந்தவும் கைகோர்த்திருக்கின்றார்கள்.'' - என்று குற்றம் சுமத்துகின்றார் இடதுசாரி முன்னணித் தலைவர்.

தமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கும்படி முதல் தடவையாக ஐ.நா. செயலாளர் நாயகத்தைப் பார்த்து விடுதலைப் புலிகள் எழுத்துமூலம் கோரியிருக்கின்றார்கள். தமிழரின் விடுதலைப் போராட்டம் இத்தகைய தீர்க்கமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே தமிழரின் தேசியப் போராட்டத்தை அடக்கி, ஒடுக்கும் கங்கணத்தோடு கொழும்பு அரசின் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் சந்திக்கின்றனர். அரசியல் ரீதியான தமது பகையுறவையும், விரோதப் போக்கையும் துறந்து கூடிக்குலாவிப் பேசுகின்றனர். இது, இறுக்கமும், தீவிரமும் அடைந்து வரும் தமிழரின் தேசிய எழுச்சிப் போராட்டத்தை எப்படியும் துவம்சம் செய்து அழித்துவிட வேண்டும் என்ற இந்த இரு தலைவர்களினதும், அவர்கள் சார்ந்த கட்சிகளினதும் பொதுநிலைப்பாட்டை எட்டுவதற்கான பொது இணக்கப்பாட்டில் உருவான சந்திப்பு என அடையாளப்படுத்துகின்றார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நேரிய - நீதியான - நியாயமான - வழிமுறைகளில் தீர்த்து வைப்பதற்கு தென்னிலங்கைச் சிங்களத்தின் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகியவற்றிடம், தெளிவானதும், உருப்படியானதும், ஆழமான தரிசனத்துடன் நெறிக்கப்பட்டதுமான ஒரு திட்டமோ யோசனையோ என்றும் இருந்ததில்லை; இப்போதும் இல்லை.

தமிழர்களுடைய அபிலாஷைகளாக தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் என்ற அடிப்படைகளைத் திம்புக் கோட்பாடுகளாகத் தமிழர் தேசம் ஏற்கனவே பிரகடனம் செய்துள்ளது. எந்தவொரு சிங்களக் கட்சியும், சிங்கள அரசியல் உலகமும் இந்த அடிப்படைகளை - இந்த மூலக் கோட்பாடுகளை - நியாயமான முறையில், புறநிலை நோக்குடன் ஆழமாக அலசிப் பார்க்கவோ, ஆராயவோ முன்வரவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்குவதில் சிங்கள அரசியல் உலகில் ஒத்திசைவும், ஒருமைப்பாடும், இணக்கமும், பற்றுறுதியும் என்றும் இருந்தமை கிடையாது என்பது தெட்டத்தெளிவு.

அதேசமயம், புறநிலையாக தமிழர்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வை வழங்கிவிடக் கூடாது என்பதில் குருட்டாம்போக்கிலான ஐக்கியமும், ஒத்திசைவும், கருத்தொற்றுமையும் சிங்களத்தின் மன மூளையத்தில் ஆழமாக வேரோடிப் பதிந்து கிடக்கின்றது என்பதும் வெள்ளிடைமலை.

அதன் பிரதிபலிப்பே மஹிந்த - ரணில் சந்திப்பு என்று நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

அதாவது, மஹிந்த - ரணில் சந்திப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதை நோக்காகக் கொண்டதல்ல. உரிமைக்கான தமிழர்களின் போராட்டம் தென்னிலங்கை அரசின் அடக்குமுறை எத்தனங்களின் எல்லையை மீறித் தனது இலக்கு நோக்கி நகர்ந்துவிடக்கூடிய ஆபத்தைத் தவிர்க்கச் செய்வது எப்படி என்ற ஆதங்கத்தின் விளைவாக இடம்பெற்றது என்பதே அர்த்தம்.

அதேசமயம், உலகமயமாதலில் அதீத ஈடுபாடு காட்டும் - முதலாளித்துவக் கொள்கைகளை முன்னெடுக்கும் - வல்லாதிக்க நாடுகளின் தேவைக்காகவும், அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவுமே மஹிந்த - ரணில் சந்திப்பு இடம் பெற்றதாகவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சுட்டிக்காட்டுகின்றமையும் கவனிக்கத்தக்க அம்சமாகும்.

மாறிவரும் உலக ஒழுங்குப் போக்கில், பேரதிகாரங்களைக் கொண்டுள்ள வல்லாதிக்க சக்திகளின் அரூபக் கரங்கள், பின்தங்கிய அல்லது மூன்றாம் மண்டல நாடுகளில் மேற்கொள்ளக்கூடிய இரகசிய நகர்வுகளும் அருட்டுதல்களும் இலகுவில் ஊகித்து உய்த்தறிந்து இனங்காணக்கூடியவை அல்லவே. .........!

# ஜி.சி.ஈ. உயர்தரத்தில் கலை, வர்த்தகப் பாடங்களும் இவ்வருடம் தொடக்கம் ஆங்கிலமொழி மூலம்

கொழும்பு,மார்ச்1

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தகப் பாடங்களை இவ்வாண்டு முதல் ஆங்கிலமொழி மூலம் கற்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேற்படி பாடநெறிகளை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்குக் கல்வி அமைச்சு திட்டமிட்டிருந்தது. இத்திட்டத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது எனத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மேலும் கூறியதாவது:

ஏற்கனவே ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கான பாடங்களே ஆங்கிலமொழியில் போதிக்கப்பட்டு வந்தன. இவ்வாண்டு முதல் கலை மற்றும் வணிகத்துறைகளுடன் தொடர்பான பாடங்களும் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படவுள்ளன.

இது குறித்த பிரேரணையைக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த அமைச்சரவைக்கு முன்வைத்திருந்தார். அதற்கே தற்போது அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய ரீதியில் 50 பாடசாலைகள் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்குத் தேவையான ஆசிரியர்களை வருடாவருடம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையும் பிரதி வருடமும் அதிகரிக்கப்படவுள்ளன.

அத்துடன் இவ்வாறு தெரிவுசெய்யப்படாத பாடசாலைகளின் ஆங்கில மொழியில் இத்துறைக்குரிய பாடங்களைக் கற்பிப்பதற்கு மாணவர்கள் மற்றும் தகுதியான ஆசிரியர்கள் போதியளவு இருக்குமாயின் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்று இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தமுடியும் - என அவர் தெரிவித்தார். (202)

# ஆரம்பக்கல்விப் பருவத்திலேயே மாணவர்களுக்கு சாரணியச் செயற்பாடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை

நல்லூர்,மார்ச்1

ஆரம்பக்கல்விப் பருவத்திலேயே மாணவர்களிடையே சாரணியச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கென இந்த ஆண்டில் தேவைப்படும் சாரணர் செயலமர்வுகளின் எண்ணிக்கை, நடத்தப்படவேண்டிய நாள்களின் எண்ணிக்கை, பங்குபற்றவேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கை, பங்குபற்றவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆகிய தகவல்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் வலயக் கல்விப்பணிப்பாளர்களைக் கோரியுள்ளார்.

கல்வி அமைச்சின் ஈடீ/1/9/1/4/39 இலக்க 30.01.2008ஆம் திகதிய கடிதத்திற்கமைய ஆரம்பக்கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு பாடசாலை இணைச் செயற்பாடாகச் சாரணர் குழுவில் ஈடுபடுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவில் சாரணர் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவும் அதிக மாணவர்கள் பங்கேற்கக்கூடியதாகச் சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தவும் ஆசிரியர்களுக்கு விளக்கமூட்டும் செயலமர்வை நடத்தவும் வசதியாக மேற்படி தகவல்களை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (202-111)

# 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வழுக்கையாற்றுத் திட்டம் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்1

இடைநிறுத்தப்பட்டிருந்த வழுக்கையாற்றுப் படுக்கை அபிவிருத்தித் திட்டம் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கென நியாப் - II திட்டத்தின்கீழ் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக அராலிப் பாலம் மற்றும் வழுக்கையாற்று அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு கடந்த வருடத்தை விட இவ்வருடம் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழுக்கையாற்றுப் படுக்கை அபிவிருத்தி தொடர்பான முக்கிய கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் எனவும் -

இதற்கென நியாப் திட்ட அதிகாரிகள் வருகை தரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - கடந்த 2005, 2006, 2007 காலப்பகுதியில் வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டம் குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் 2 வீதம் பயன்படுத்தப்பட்டு மிகுதி - அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாத நிலையில் மீளச் சென்றது எனவும் - அந்நிதியே இவ்வருடம் மீண்டும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (202-95)

# தொல்புரம் அரசினர் வைத்தியசாலை பிற்பகலில் மட்டும் இயங்குகின்றது

## இதனால் நோயாளர்கள் சிரமம்

வலி.தென்மேற்கு,மார்ச்1

தொல்புரம் அரசினர் வைத்தியசாலை கடந்த ஒரு மாதமாகப் பிற்பகல் வேளையில் மட்டும் இயங்கி வருகின்றது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த டாக்டர் நீண்டநாள் விடுமுறையில் கொழும்பு சென்றுள்ளதால் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான டாக்டர் இங்கு பிற்பகலில் வந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார்.

சுழிபுரம், தொல்புரம், மூளாய், பொன்னாலை, பண்ணாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நோய்களுக்கு சிகிச்சை பெற இந்த வைத்தியசாலையையே நாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-135)

# மருந்து வகைகளுக்கு நியாயவிலை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் திங்களன்று

யாழ்ப்பாணம்,மார்ச்1

குடாநாட்டில் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் மருந்து வகைகளுக்கு நியாயமான விலைகளை நிர்ணயிப்பது தொடர்பாகக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

யாழ்.செயலகத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இக்கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் மருந்தக உரிமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (202)

# நூலக அமைப்பொன்றை நிறுவுவதற்கான ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்1

மாணவர்கள் நலன்கருதி நூலக அமைப்பொன்றை நிறுவுவதற்கான கலந்துரையாடலொன்றை பண்டித மாணவ கழகத்தினர் நடத்தவிருக்கின்றனர்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை 9.30 மணிக்கு 223, காங்கேசன்துறை வீதியிலுள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் இக்கலந்துரையாடல் நடைபெறும். மாணவர்கள், ஆய்வாளர்கள் போன்றோர் பரந்தளவில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இதனைச் செயற்படுத்துவது தொடர்பான ஆலோசனைகள் இக்கலந்துரையாடலில் நடைபெறுமென்று பண்டித மாணவர் கழகத்தின் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலுக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமை வகிப்பார். நலன் விரும்பிகள் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் கலந்துகொள்வர். (202)

# பண்டத்தரிப்பில் கமநல சேவை நிலைய உப அலுவலகம் அமைக்கக் கோரிக்கை

வலி.தென் மேற்கு, மார்ச்.1

பண்டத்தரிப்பில் கமநலச் சேவை நிலைய உப அலுவலகம் ஒன்றை பிரதேச விவசாயிகளின் நலன்கருதி நிறுவப்பட வேண்டும் என்று இப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் சம்மேளனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது மானிப்பாய் மேற்கு நவாலி வீதியில் நிறுவப்பட்டிருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச கமநல சேவை நிலையத்திற்கு பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, பிரான்பற்று, வடலியடைப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சென்று வருவதிலும், உள்ளீடுகளை பெறுவதிலும் பலத்த போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் இப்பிரதேச விவசாயிகளின் நலன் கருதி பண்டத்தரிப்பில் கமநலச்சேவை நிலை உப அலுவலகம் ஒன்றை திறக்குமாறு விவசாயிகள் சம்மேளனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. இந்த உப அலுவலகத்தை நிறுவுவதற்கான காணி ஒன்றையும் அன்பளிப்பாக வழங்குவதற்கு நலன் விரும்பியான விவசாயி ஒருவர் முன்வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-135)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 19 | 02.03.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி : தசமி | மு.இ. 11.28 வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| [illegible] | [illegible] வரை |
| [illegible] : | 09.2[illegible] - 10.[illegible] |
| ராகுகாலம் : | 04.57 -06.27 |

# ஊழியர் சேமலாப நிதி மீளப் பெறாதவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்1

ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெறுவதற்கென குடாநாட்டிலிருந்து விண்ணப்பித்து ஆறு மாதத்திற்கு மேலாகியும் அதனைப் பெறாதவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்.வீரசிங்கம் கட்டடத்தின் 4ஆம் மாடியில் இயங்கிவரும் மாவட்டத் தொழில் அலுவலகத்தில் தங்களது விவரங்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கேட்டுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VEMBADI GIRLS ' HIGH SCHOOL OLD GIRLS ' ASSOCIATION**

**GENERAL MEETING ON REUNION DAY**

**Date: 13 March 2008 Thursday**
**Time: 2.30 pm.**
**Venue: Mabel Thambiah Hall**

**Agenda**

3.00 pm Hoisting the school flag
Lighting the oil lamp
Welcome address by the President
Address by the Executive Patron
Address by the Chief Guest
Treasurer's Report
Proposed amendments to the constitution
Vote of Thanks
Entertainment
School Hymn

Proposed amended constitution is available in the office of the OGA. If there are any more proposals for amendments, please send to the Secretary, Office of the OGA, Vembadi Girls' High School

All are welcome

Dear members, please consider this as the individual invitation

(சி/551632) - Executive Committee



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரல்**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காகப் பயன்படுத்துவதற்கு வான் ஒன்றை அவ்வாகனதிற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்தவேலைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக கிலோமீற்றர் அடிப்படையில் வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் 17.03.2008 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.


மீளளிப்பு செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 300.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து 05.03.2008 ஆம் திகதிவரை கேள்விப் பத்திரப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 17.03.2008 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் *தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,* திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப்பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக் கிளையில் உதவிப் பதிவாளரிடம் பார்வையிடலாம். பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/551638) **பதிவாளர்.**


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

மண் மகிழ 27 . 09 . 1957



கண் நெகிழ 01 . 02 . 2008

**அமரர் மார்க்கண்டன் சிறிதரன்**

*(ஆசிரியர், யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்)*

அப்பா! அப்பா! அன்புத் தெய்வமே!
நெஞ்சம் துடிக்குதப்பா! நினைவு தடுமாறுதப்பா!
உம் பிரிவை அறியா எம்மழலைச் செல்வங்கள்
அப்பா வருவார் என்று வாசலில் காத்து நிற்பதைக் காண,
பஞ்சினிலே தீ போல் பாழ் வயிறு வேகுதப்பா!
ஊர் போற்றும் உத்தமராய் நீர் வாழ்ந்து,
உலகம் போற்றும் உம் பிள்ளைகள்
எதிர்காலம் பாராமல் ஏனப்பா போய் மறைந்தீர்?
கண்ணயர்ந்து போனாலும் கலையவில்லை உம் உருவம்
நாள்கள் பல நகர்ந்தாலும் அழியாத கோலமாய் எம் உள்ளமதில் வாழ்பவரே!
நடமாடும் வீட்டில் படமாகிப் போன எம் தெய்வமே!
எம் ஜீவன் உள்ளவரை அழியாது உம் நினைவு.

01.02.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டு, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் அனுதாப உரைகளை ஆற்றியோருக்கும் தொலைபேசி மூலம் துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (01.03.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

முருகமூர்த்தி கோவில் வீதி,
சங்கானை கிழக்கு, சங்கானை.
தொ.பே.:060 -221 -6871 (71576)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

## ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தில் நூலகம்

வலி.தென்மேற்கு, மார்ச்1

யாழ்.ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம், சங்கப் பணிமனையில் மாணவர்களின் நலன் கருதி நூலகம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சங்க கால இலக்கிய-இலக்கண நூல்கள் உட்பட மற்றும் பல நூல்கள் இந்த நூலகத்தில் இடம்பெறவிருப்பதாகச் சங்கச் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் தெரிவித்தார். (202-135)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச்1

வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி விழா எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். மறுநாள் காலை திருவூஞ்சல் உற்சவமும் தொடர்ந்து திருவீதியுலாவும் இடம்பெறும். (202)

★ ★ ★

வலி.தென்மேற்கு, மார்ச்1

வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகி 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (202-135)

## தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் அதிபர் பதவி

கட்டைவேலி, மார்ச்1

தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவி வெற்றிடத்துக்கு வடமராட்சி கல்வி வலய விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் எஸ். குகநாதனை நியமிக்குமாறு பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாடசாலையின் அபிவிருத்தி, துரித செயற்பாடுகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இதே கிராமத்தைச் சேர்ந்த எஸ். குகநாதனையே அதிபராக நியமிப்பது பொருத்தம் என நாம் கருதுவதால் இப்பதவிக்கு நியமிக்குமாறு வேண்டுகின்றோம்- என இப் பாடசாலையின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், சூழவுள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் விடுத்துள்ள கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-160)

## வருமான மேற்பார்வையாளருக்கு சேவைப் பிரமாணக் குறிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.01

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வருமான மேற்பார்வையாளருக்கான (R.S)சேவைப் பிரமாணக் குறிப்பினை வெளியிட்டுள்ளது.

பல வருட இடை வெளிக்கு பின்னர் வடக்கு மாகாண பிரதி ஆளுநர் மொகான் விஜய விக்கிரம இதற்கான அங்கீகாரத்தை வழங்கினார்.

வகுப்புIII,II,I ஆகியவற்றுக்கான சம்பள அடிப்படை விகிதம், வயது எல்லை(18-45) என்பன குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எட்டாம் வகுப்பு சித்தியுடன் உள்ளூராட்சி சபைகளில் 10 வருட தொடர்ச்சியான சேவையில் உள்ளவர்கள் வருமான மேற்பார்வையாளர் தரம் III இற்கு சேர்க்கப்படலாம்.

மேலும் வகுப்புII,வகுப்புIஆகிய பதவி உயர்வுகளுக்கு பரீட்சை மூலமே ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது. (202-95)


**அறிவித்தல்**

எள்ளுவிலை அதிகரிப்பால் இன்றிலிருந்து V.S.P. நல்லெண்ணை 450/= ரூபாவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**பரிமளா ஸ்ரோஸ்**
இல.26A , மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (71573)


## தெல்லிப்பழை வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை

வலி.தென்மேற்கு, மார்ச்1

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது.

வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான ஆளணி எண்ணிக்கை 50 பேர் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. எனினும் தற்போது இங்கு 14 பேரே பணிபுரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாதிய உத்தியோகத்தருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் யாழ்.பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளருக்குக் கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (202-135)


**அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க (வ-து)**

**பதவி வெற்றிடம்**

அரியாலை ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பணிநிலைகளில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய நியமனம் செய்வதற்கான தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி : கிளைமுகாமையாளர்
குறியீட்டு இலக்கம் : 208/14
சம்பள அளவுத்திட்டம் (மாதம்) : 9700.00 - 11350.00
80 X 10, 85 X10
வயதெல்லை : 30வருடங்கள்
தகைமைகள்:
01. கூட்டுறவுச்சங்க ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைப்பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,
அல்லது
02. கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரணம்) தராதரப்பத்திரம்/ க.பொ.த (சா/தரம்) சான்றிதழில் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ எண்கணிதம் மற்றும் சிங்களமொழி/ தமிழ்மொழி உள்ளிட்ட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

02. பதவி : விற்பனை உதவியாளர்
குறியீட்டு இலக்கம் : 308/17
சம்பள அளவுத்திட்டம் (மாதம்) : 8950.00 - 10300.00
65 X 10, 70 X10
வயதெல்லை : 30வருடங்கள்
தகைமைகள்:
01. கூட்டுறவுச் சங்க ஊழியர் (கனிஷ்ட) தராதரப்பத்திரம்
அல்லது
02. 8ஆம் வகுப்பில் சித்தியுடன் விற்பனை அலுவல்கள் பற்றிய 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாததுடன் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ 15.03.2008ஆம் திகதிக்கு முன்னராக

**பொதுமுகாமையாளர்,**
**அரியாலை ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**இல.15, நருத்தெரு லேன்,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

29.02.2008 (சி/551639) **பொதுமுகாமையாளர்.**


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலட்சுமி சாம்பசிவம்



கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி சாம்பசிவம் வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சிங்காரப்பத்தர்- பருவதம் தம்பதியரின் மருமகளும் துரையப்பாப்பத்தர்- செல்லம் தம்பதியரின் மகளும் கரிதரன் (J.P.,-யாழ்.மத்தியஸ்தர் சபை உறுப்பினர்), சிங்கராசா, செல்லத்துரை ஆகியோரின் தாயும் கௌரி, இராசமலர், சாரதாதேவி ஆகியோரின் மாமியும் குமரன், அரவிந், காயத்திரி, காமேஸ்வரி, சாம்பவிகா, ஜயரூபன், சிந்துசன், கஜன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாராயணசுவாமி (S.N.), முருகையா (கொழும்பு), கிருஸ்ணசாமி, கமலாம்பாள் (திருமலை) மற்றுழ் இராஜாம்பாள் மகேஸ்வரி, பாலகிருஸ்ணன், நடராசா, கமலா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராசமணி, ஞானம்மாள், கிருஸ்ணசாமி, பஞ்சரெத்தினகோபால், வேணுகோபால், இராசகோபால், மகாலட்சுமி, மகேஸ்வரி மற்றும் பாக்கியலட்சுமி (இந்தியா) வரதலட்சுமி, கோபாலசாமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சா.கிரிதரன்,
சா.சிங்கராசா,
சா.செல்லத்துரை
*(மகன்மார்).*

*12/44, கன்னாதிட்டி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: 2227340.
(71572)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யாவில் அதிகாரப்பகிர்வு ஒப்பந்தம் எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரதமர் பதவி



நைரோபி, மார்ச் 01

கென்யாவில் பொதுத் தேர்தல்களுக்குப் பின்னர் இடம்பெற்றுவந்த கலவரங்களுக்கும், இந்தக் களரிகளுக்கும் ஐ.நா.முன்னாள் செயலாளர் நாயகமும், பேச்சுகளுக்கான அனுசரணையாளருமான கொபி அனானின் முயற்சியால் முடிவுகள் கட்டப்பட்டுவிட்டன.

கென்ய ஜனாதிபதி மவாய் கிபேகியும், எதிர்க்கட்சித் தலைவர் ரெய்லா ஒடிங்காவும் அதிகாரப் பகிர்வு உடன்படிக்கையில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளனர். தலைநகரான நைரோபியில் கைச்சாத்திடும் வைபவம் நடைபெற்றது.

எதிரும் புதிருமான இரு அரசியல்வாதிகளும் கைலாகு கொடுத்துக் கொண்டார்கள். புகைப்படக் கருவிகளுக்கு முன்னால் புன்னகைத்துக் கொண்டார்கள். இந்த உடன்படிக்கையின்படி, தற்போதைய ஆளுங்கட்சி உறுப்பினர்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் கொண்ட கூட்டரசு அமைக்கப்படும்.

கடந்த டிசம்பர் தேர்தல்களில் தாம் ஈட்டிய வெற்றி நயவஞ்சகமாகக் களவாடப்பட்டுவிட்டதென எதிர்க்கட்சித் தலைவர் ரெய்லா ஒடிங்கா குற்றஞ்சாட்டி வந்துள்ளார். வாக்குகளின் எண்ணிக்கையில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என சர்வதேச கண்காணிப்பாளர்களும் குறிப்பிடலானார்கள். இதையடுத்து, மூண்டுவந்த கலவரங்களினால் சுமார் ஆயிரத்து 500 பேர் வரை பலியாகியுள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பாக அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே ஆரம்பமான பேச்சுகள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இழுபறி நிலையில் இருந்து வந்தன. அனுசரணையாளராக செயற்பட்ட கொபி அனான் பேச்சுகளை இடைநிறுத்தம் செய்துவிட்டு, தனிப்பட்ட முறையில் இரு தரப்புகளையும் அணுகலானார்.

இதன் விளைவாக ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின்படி, எதிர்க்கட்சித் தலைவர் ரெய்லா ஒடிங்கா பிரதமராகப் பதவியேற்பார். "கடந்த இரு மாதங்களாக கென்ய மக்கள் வேதனையைத் தவிர வேறெதனையும் அறியாதிருந்தார்கள். இப்போது இந்நிலை நீங்கிவிட்டது." - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கென்யாவில் இடம்பெற்றவந்த கலவரங்களால் பல்லின மக்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். அரச ஆதரவாளர்களும், எதிர்க்கட்சி ஆதரவாளர்களும் இவர்களில் அடங்குவர். ஏறத்தாழ 6 லட்சம் பேர் இல்லங்களை விட்டு வெளியேறியுள்ளார்கள். 500 இற்கு மேற்பட்ட சிறார்கள் தங்களின் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளார்கள் என கென்யா செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

# ஈரானுக்கு எதிரான புதிய தடைகள் இன்று?

நியூயோர்க், மார்ச் 01

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஈரானிற்கு எதிரான புதிய தடைகள் இன்று வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, ஐ.நா. விதிக்கவுள்ள புதிய தடைகளுக்கு ஆதரவாக தாம் வாக்களிக்கவுள்ளன என்று பிரான்ஸும் பிரிட்டனும் அறிவித்துள்ளன.

ஈரானிற்கு எதிரான மூன்றாவது சுற்றுத் தடையை இரு நாடுகளும் இணைந்தே ஐ.நாவிடம் கொண்டுவந்திருந்தன. கடந்த முறை ஈரானிற்கு எதிரான தடைகள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. எனினும் இம்முறை பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளான லிபியா, இந்தோனேஷியா, தென்னாபிரிக்கா, வியட்நாம் போன்றவை இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புச் சபையின் புதிய தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக ஐக்கிய நாடுகளுக்கான லிபியத் தூதுவர் தெரிவித்துள்ளார். இந்தோனேஷியாவும் புதிய தடை குறித்து கடும் கவலை வெளியிட்டுள்ளது.

யுரேனியச் செறிவூட்டலை நிறுத்த மறுப்பதற்காகவே ஈரான் மீது தடை கொண்டுவரப்படுகின்றது. புதிய தீர்மானத்தின்கீழ் போக்குவரத்துத் தடைகளும் சொத்துகளை முடக்குதலும் நடைமுறைக்கு வரவுள்ளன.

உலக அரங்கில்

# முஷாரப்பின் பதவி பறிபோக வாய்ப்பு

## அமெரிக்க உளவுத்துறை கருத்து

பாகிஸ்தான், மார்ச்.01

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை நாடாளுமன்றம் பதவிநீக்கம் செய்வதற்கான வாய்ப்பு இருப்பதை மறுக்க முடியாது என அமெரிக்க உளவுத்துறையின் மூத்த அதிகாரி மைக்கல் மெக்கோனல் கூறியுள்ளார்.

"நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணை நடத்தி முஷாரப்பை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதில் நவாஸ் ஷெரீப் தீவிரமாகவுள்ளார். ஆனால், முஷாரப் மீது குற்றவிசாரணை நடத்தி அவரைப் பதவிநீக்கம் செய்ய வேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும். பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்), அவாமி தேசிய கட்சி ஆகிய கட்சிகள் இணைந்த கூட்டணிக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை இல்லை என்றாலும் சில சுயேச்சைகள் அவர்களுக்கு ஆதரவளித்தால் முஷாரப்பை நீக்கும் தீர்மானம் வெற்றிபெறும்." - என்றார் மெக்கோனல்.

கூட்டணி எவ்வாறு அமைகிறது. அதில் யாரெல்லாம் அங்கம் வகிக்கப் போகிறார்கள், யார் பிரதமராகப் போகிறார் என்பதையெல்லாம் அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது என்றும் மெக்கோனல் கூறினார்.

# ஆப்கானின் வன்முறை கூடிய பகுதியில் இராணுவப் பணிகளில் இளவரசர் ஹரி

## இரகசியத்தை வெளிப்படுத்தியது இணையத்தளம்

காபூல், மார்ச் 01



ஆப்கானிஸ்தானின் வன்முறை மிகுந்த பகுதியொன்றில் பிரிட்டன் இளவரசர் ஹரி, இராணுவப் பணியாற்றிவருவது தற்போது தெரியவந்துள்ளது.

ஹரி பாதுகாப்பாக நாடு திரும்பும்வரை இந்த விடயத்தை இரகசியமாக வைத்திருப்பதற்கு பிரிட்டன் அதிகாரிகள் விரும்பியபோதிலும் அமெரிக்காவின் 'பிரஜ் ரிப்டோர்ட்' எனும் இணையத்தளம் இதுகுறித்த தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்தே ஹரி, ஆப்கானிஸ்தானின் ஹெம்லாண்டில் பணிபுரியும் வீடியோக் காட்சியை பிரிட்டன் வெளியிட்டுள்ளது.

ஹரி தான் கிறிஸ்மஸ் தினத்தன்று ஆப்கானிஸ்தான் வந்தார் என்றும், இதனால் ஏனைய வீரர்கள் உற்சாகமடைந்தார்கள் எனவும் தெரிவித்துள்ளார். ஆரம்பத்தில் எதுவும் சுவாரஸ்யமாக நடைபெறவில்லை. எனினும், தற்போது உற்சாகமாகவுள்ளது என அவர் வீடியோவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தத் தகவல் வெளியானது குறித்து ஆத்திரமடைந்துள்ள இராணுவ அதிகாரிகள் அவரை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். ஹரி ஆப்கானிஸ்தானிற்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை விஜயம் மேற்கொள்வது வழமை என்றபோதிலும் அங்கு கடந்த 10 வாரகாலமாகவே இராணுவத்தில் பணிபுரிகின்றார்.

ஹரி கடந்த மே மாதத்தில் ஈராக்கில் பணியாற்றியிருக்க வேண்டும். எனினும், பாதுகாப்பு அச்சம் காரணமாக அது இறுதியில் கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இராணுவத்தில் பணிபுரியும் பட்சத்தில் மோதலில் ஈடுபடத் தனக்கு வாய்ப்புத் தர வேண்டுமென ஹரி வற்புறுத்தியிருந்தார். பிரிட்டன் மகாராணியே தான் ஆப்கானில் பணிபுரியவுள்ள செய்தியைத் தன்னிடம் தெரிவித்தார் என ஹரி கூறியுள்ளார். ஹரி, ஹெம்லாண்டி ரோந்தில் ஈடுபடுவதுடன் விமானத் தாக்குதல்களை வழிநடத்துகின்றார்.

# புதிய அரசில் சேர நவாஸ் நிபந்தனை

இஸ்லாமாபாத், மார்ச்.01

பாகிஸ்தான் ஜனாதிபதி பதவியில் இருந்து முஷாரப் விலகினால்தான், புதிய அமைச்சரவையில் சேருவேன் என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கணவர் ஆஸிப் அலி சர்தாரி தலைமையில் இயங்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சி, கடந்த 18ஆம் திகதி நடந்த தேர்தலில் அதிக இடங்களில் வென்று ஆட்சி அமைக்கிறது. நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி, புதிய அரசுக்கு ஆதரவு அளிக்கிறது.

அதேநேரத்தில் ஜனாதிபதி பதவியில் இருந்து முஷாரப் விலகினால் மட்டுமே அமைச்சர் பதவியை ஏற்போம். ஏனெனில், அமைச்சர்களுக்கு முஷார்ப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதை எங்கள் கட்சியினர் விரும்பவில்லை என்றார் நவாஸ் ஷெரீப். ஜனாதிபதி பதவிக்கு தான் போட்டியிட மாட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

"பாகிஸ்தானில் ஜனநாயகத்தை வலுப்படுத்த புதிய ஜனாதிபதி தேவை. நீதிபதிகளைப் பணியில் இருந்து நீக்கி அவர்களைக் கைது செய்தவரும் (முஷாரப்), மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைத்தவரும், புதிய அரசில் இடம்பெறுவது சரியாக இருக்காது." - என்றார் நவாஸ்.

1999ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்த முஷாரப், அப்போது பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப்பை நாடு கடத்தினார்.

முஷாரப்பின்கட்சி தற்போது நடந்த தேர்தலில் தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிக்காதீர் மலேஷிய இந்தியருக்கு எச்சரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 01

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிக்கு வாக்களித்தால் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்று வம்சாவளி இந்தியர்களை மலேஷியாவின் ஆளும் கூட்டணி மிரட்டியுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலேஷியாவில் எதிர்வரும் 8 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதனையொட்டி மலேஷியாவின் ஆளும் பரிஸான் நஷனல் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மலேஷிய இந்தியக் காங்கிரஸ் கட்சி பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் ஆளும் கூட்டணிககு எதிராக எதிர்க்கட்சிக்கு வாக்களித்தால் இந்தியர்கள் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அந்த விளம்பரங்கள் மிரட்டும் தொனியில் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

மலேஷியாவில் வாழும் இந்திய வம்சாவளியினர் சம உரிமைகோரிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால் போராட்டக்காரர்கள் மீது அந்நாட்டு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, இந்தியர்கள் ஆளும் கூட்டணிக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று கருதப்படுகிறது.

# ஐ.நாவின் மனித உரிமையைப் பேணும் உடன்படிக்கைகளில் கியூபா கைச்சாத்து

நியூயோர்க், மார்ச் 01

ஐ.நாவின் மனித உரிமைகள் சம்பந்தமான சட்டரீதியான இரு உடன்படிக்கைகளில் கியூபா கைச்சாத்திட்டுள்ளது. நியூயோர்க்கில் நேற்று முன்தினம் கியூப வெளிவிவகார அமைச்சர் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டார். கியூபாவின் புதிய ஜனாதிபதியாக ரவூல் காஸ்ட்ரோ சத்தியப்பிரமாணமெடுத்துக் கொண்ட பின்னர் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சர்வதேச பிரகடனங்களில் இவ்விரு உடன்படிக்கைகளும் அடங்கும். இவற்றிற்கிணங்க கியூபா கருத்துச் சுதந்திரம், கூட்டங்கள் நடத்துவதற்கான சுதந்திரம், பயண உரிமை ஆகியவற்றைப் பேணுவதற்குக் கடமைப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தினால் இந்நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1959ஆம் வருடத்திய புரட்சி தொட்டு கியூபப் பிரஜைகளால் அனுபவிக்கப்பட்டுவரும் சுதந்திரத்தையும் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தும் பொருட்டே தற்போது உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என கியூப வெளிவிவகார அமைச்சர் பிலிப்பி பேரிஸ் ரொஹு தெரிவித்துள்ளார்.

இவரே மேற்படி இரு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டுள்ளார் இவ்விரு உடன்படிக்கைகளில் ஒன்று, சிவில் அரசியல் உரிமைகளைப் பேணுகின்றது. மற்றையது இதர சமூக, பொருளாதர, கலாசார உரிமைகளைப் பேணுகின்றது. இவ்வுடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள கியூபா இவற்றிற்கிணங்க எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 22 சுயாதீன பத்திரிகையாளர்களையும் விடுதலை செய்துவிட வேண்டுமென நியூயோர்க்கிலுள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கான குழுவைச் சேர்ந்த கார்லோஸ் லோரியா அறைகூவல் விடுத்துள்ளார்.

# வீட்டுக்கு ஒரு குழந்தைத் திட்டத்தை கைவிடுவதற்கு சீன அரசு திட்டமாம்

பீஜிங், மார்ச் 01

சீனாவில் நடைமுறையிலுள்ள வீட்டுக்கு ஒரு குழந்தைத் திட்டத்தை கைவிடுவதற்கு அந்நாட்டு அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகிலேயே அதிகமாக மக்கள் தொகை கொண்ட நாடான சீனா, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக நகர்ப்புறங்களில் ஒரு குடும்பத்தினர் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்துக்கு அந்த நாட்டு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு இருக்கிறது. இதனால் இந்தச் சட்டம் சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. 1970 களில் ஒரு பெண் சராசரியாக 5.8 குழந்தை பெற்றார். இது இப்போது 1.8 ஆகக் குறைந்துவிட்டது.

இந்த நிலையில் வயதான குடிமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ஒரு குழந்தை என்ற சட்டத்தை வாபஸ் பெறலாமா? என்பது குறித்து அந்த நாட்டு அரசு ஆலோசித்து வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது. இருந்தாலும் குடும்பக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளை முற்றிலுமாக மாற்றும் திட்டம் ஏதும் இல்லை என்று அந்த நாட்டுத் துணை சுகாதார மந்திரி ஜாவோ பெய்க் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொறட்டுவவைச் சேர்ந்த இருவர் ப..ண்டிருப்பில் சுட்டுக்கொலை!

## வியாழன் இரவு சம்பவம்

கல்முனைக்குடி, மார்ச். 01

மொறட்டுவவைச் சேர்ந்த மூரத்தளபாட வியாபாரிகள் இருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.15 மணியளவில் பாண்டிருப்பில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மற்றுமொருவர் படுகாயங்களுடன் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள பாண்டிருப்பு கல்யாணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இரவு மொறட்டுவவில் இருந்து கொண்டுவரப்பட்ட மரத்தளபாடங்களை லொறியில் இருந்து இறக்கிக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் குறித்த நபர்கள் மீது கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

மொறட்டுவவைச் சேர்ந்த பி.பி.பெர் னாண்டோ (வயது - 55) மற்றும் என்.எஸ். வொலன்சோ (வயது - 40) ஆகிய இருவருமே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். படுகாயம் அடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த சந்திரதாஸ (வயது - 50) எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

(சி)

## முகத்துவாரத்தில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த பொலிஸாரில் ஒரு பெண் பொலிஸாரும் அடங்குவார் என்றும் இவரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார். இவர் மேலதிக சிகிச்சைக்காக அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். முகத்துவாரம் பொலிஸாரால் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸார் வீடுவீடாகச் சென்று தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்பொழுது குறிப்பிட்ட வீட்டுக்குள் சென்று சோதனையிட முற்பட்டபோது அந்த வீட்டில் இருந்த தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கவைத்தார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதிகள் முழுவதும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இந்தத் தேடுதலின்போது 4 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர் என்று முகத்துவாரப் பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற வீடு தமிழர் ஒருவருக்கே சொந்தமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(சி)


CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
02-03-08 (Sun) 03-03-08 (Mon)
*Inte...t & E-Mail * Visual Basic Programing
* Computer Hardware * ICT [Grade 10 & 11]
* Computerized Accounting

இதோ உங்களுக்காக...

FLASH
1) 1GB Kingston USB - 1000/=
2) 2GB Kingston USB - 1700/=
3) 4GB Kingston USB - 2800/=

RAM KINGSTON
1) 512MB DDR II - 1700/=
2) 1GB DDR II - 2800/=
3) 128 SD Ram - 1500/=
4) 256 SDRam - 2500/=
5) 256 DDR-I - 2500/=
6) 512MB DDR-I - 3900/=

TONERS
1) HP Toner 12 A - 5600/=(Original)
2) HP Toner 49 A - 5800/=(Original)
3) HP Toner 92 A - 5700/=(Original)
4) HP Toner 13 A - 5800/=(Original)
5) HP Toner 15 A - 5700/=(Original)

MOTHER BOARD
1) Biostar - 6400/=
2) Foxcon - 6750/=
3) Gigabyte - 7250/=
4) Intel 945 - 9000/=
5) Asus - P5GC-Max - 7700/=
6) 478 Mother Board- 7500/=

MONITORS
1) View Sonic 15" Black - 11750/=(CRT)
2) View Sonic 15" Silve Black - 12750/=(CRT)
2) View Sonic 17" Widescreen - 24900/=(LCD)

Intex Keyboard - 500/=
Intex Speaker - 500/=
DVD R/W Sata - 4100/=

BOOFERS
1) Creatives 5.1 - 9500/=
2) Microlab 2.1 - 3700/=

HARD DISK
1) 80 GB SATA - 5500/=
2) 80 GB IDE - 5800/=
Casing White
VGA Card
T.V Card
478 Fan - 1300/=
Scanner - 6750/=
ATX Black Casing - 4500/=

PRINTER
1) HP 1020 Laser Jet - 19000/=
2) HP All inone - 14000/=
3) HP 1460 - 5750/=
4) Epson IQ 300+II - 21500/=
5) Samsung ML 2010 - 15750/= (Laser Jet)

Warranty உரிய பொருள்களுக்கு 1 Year முதல் 3 Years வரை Warranty வழங்கப்படும்.
MUSIC WORLD & COMPUTERS
141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## 'கலர் லாப்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குப் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார். தமது நிறுவனத்தில் வழமையான சேவைகள் நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியான செய்தி குறித்துப் பிரஸ்தாபித்த போதே அவர் இந்த விவரங்களைக் குறிப்பிட்டார்.

நேற்ற முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.15 மணியளவில் ஏற்பட்ட இந்த தீயை மாநாகர சபையின் தீயணைப்புப் படையினர் சுமார் இரண்டு மணி நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (அ-50)

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சின் அதிகாரி கூறினார்.

அதேவேளை-

இலங்கையில் மோதல்கள் அதிகரித்த பின்னர் இந்திய விமானப்படை தென்னிந்திய வான்பரப்பில் தனது கண்காணிப்பு ரோந்துப் பணிகளை அதிகரித்துள்ளதாகவும் இந்த ஆண்டில் கண்காணிப்புப் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

மேலும்-

சீனா மற்றும் பாகிஸ்தானிடம் இலங்கை அதிக ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறது. ஆயினும் அவைகுறித்து இந்தியாவுக்கு அவ்வப்போது அறிவித்துவருகிறது - என்று ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவை தெரிவித்தது.(அ)

## பிரிட்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருப்பது தெரிந்ததே.

இதனை நடைமுறைப்படுத்தும் படியே பிரிட்டிஷ் அமைச்சர் கோரியிருந்தார்.

புலிகளுடன் தொடர்புடைய பிரித்தானிய தமிழர் சபை மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. ஆகியோருடன் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்திய பின்னரே மனித உரிமைகள் கண்காணிப்பு அலுவலகத்தை நிறுவும் கோரிக்கை விடப்பட்டது என்றும் -

இலங்கை இன்றும் பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள நாடு அல்ல என்றும் இலங்கையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச சட்டங்களுக்கு இணங்க இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்படுமாறும் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு உதவுமாறும் பிரிட்டிஷ் அமைச்சருடனான சந்திப்பின்போது பிரித்தானிய தமிழர் சபை கோரியிருந்தது.

## ஜே.வி.பிக்குள்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மட்டத்தில் பரவலாகக் குறைகூறி வருகின்றதாம்.

இதேவேளை, கட்சியின் உள்ளக அமைப்புகளின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதில் தீவிர முயற்சி எடுத்துவரும் விமல் வீரவன்ஸவின் ஆதரவாளர்கள், அதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியையும் எட்டியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இதற்கிடையில், கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இப்போது பகிரங்கமாக எடுத்திருக்கும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடும் கட்சிக்குள் கடும் அபிப்பிராய பேதத்தை எழுப்பியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னையகாலங்களில் கட்சிகளில் எழுந்தகருத்துமுரண்பாடுகளை மூடிமறைத்தமைபோல, இப்போதும் மறைக்க முடியாது என்றும் அத்தகைய மூடுமந்திர நிலையை இப்போதைய உட்கட்சி மோதல்கள் கடந்துவிட்டன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)


SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2010, 09, 08-
கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள்
08 PAPER
TAMIL - S சிவா (புதன் 4.30 6pm சனி, ஞாயிறு 3pm)
LOG - N சசிகலா (திங், வியா 6.15 am)
Econ - N.B அஜீதான் (திங், வெள்.3pm)
HINDU - S கார்த்திக்
POLY.SC - T ஜன்
GEO - A.RAJAH
CHRIS, DRA, ENG SINHALA
C/MA: 08 - PAPER
FRI.SAT.SUN 5-6.30pm

தரம்: 5 புலமைப் பரிசில்
வெற்றித்தேர்வு திருமலை S. கணேசலிங்கம் அவர்களின்
வெற்றித்தேர்வு வினாத்தாள்: 1 2 3 4 5 6 7
இப்பொழுது சகல புத்தகசாலைகளிலும்
வெற்றித்தேர்வு தொடர்பாகத் தேவைப்படுவோர். 021 222 9016
வெற்றித்தேர்வு 7 மாவட்ட ரீதியிலான பரீட்சை
நாளை ஞாயிறு
பொருத்தமான நேரத்தில் எத்தனை வெள்ளைவாரங்களும் பரீட்சை எழுதலாம்
6am, 8am, 10am, 2pm, 4pm
கட்டணம் ரூபா:30மட்டும்
பரீட்சை நடைபெறும் இடங்கள்.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
பிறைற்மன் கல்வி நிறுவனம்
நீராவியடி பிள்ளையார் கோயில் முன்பாக


## யுத்தப் பகுதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

...து தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்துக்காக அதிக தொகைப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை நிர்வகிப்பது நாடாளுமன்றம்தான். இந்நிதி உரிய முறையில் செலவிடப்படுகிறதா என்று நாட்டு மக்கள் எம்மிடம் கேட்கின்றனர்.

உண்மையில் இந்த நிதி யுத்தத்துக்காக நீதியான முறையில் செலவிடப்படுகிறதா என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

நல்ல முறையில் இந்த நிதி செலவிடப்பட்டு பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டினால் உண்மையில் நாம் மகிழ்ச்சியடைவோம்.

எப்படி இருப்பினும், இந்த யுத்தத்தின் உண்மைநிலையை இந்த நாட்டு மக்கள் அறியவேண்டும். அதற்காக ஊடகவியலாளர்களை யுத்தப்பகுதிகளுக்குச் செல்ல அரசு அனுமதிக்க வேண்டும்.

வெளிநாடுகளில் ஊடகவியலாளர்கள் யுத்த களத்துக்குச் சென்றுதான் செய்திகளைச் சேகரிக்கின்றனர். அப்போதுதான் உண்மை நிலை வெளியே தெரியவருகின்றது.

இங்கேயும் அரச ஊடகங்களில் உள்ள ஊடகவியலாளர்களை மாத்திரமன்றி தனியார் ஊடகங்களின் ஊடகவியலாளர்களையும் யுத்தப் பகுதிகளுக்குச் செல்ல அரசு அனுமதிக்க வேண்டும் - என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

.யாளர்களுடனான உரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சுச் சேவையிலிருந்து அடுத்தவாரம் ஓய்வு பெறப்போகிறார் நிக்கொலஸ் பேர்ன்ஸ். எனினும் அங்கு தொடர்ந்தும் இந்திய விவகாரங்களைக் கையாள்வார் என்று கூறப்படுகின்றது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவுடன் அமெரிக்கா மிகவும் நெருக்கமாக இணைந்து செயற்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் வன்முறைகள் மூண்டுள்ளமை குறித்து இரு நாடுகளும் அச்சம் கொண்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்தி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அண்மையில் இதேபோன்ற கருத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவுடனான அணுசக்திஉடன்படிக்கைதொடர்பாக இந்தியா துணிச்சலான முடிவை எடுக்க வேண்டுமென்றும் நிக்கலஸ் பேர்ன்ஸ் வலியுறுத்தியிருந்தார். (சி)

# சிறுவன் கடத்தப்பட்ட சம்பவத்தில் தொடர்பில்லை

## இராணுவம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

சுதுமலை வடக்கில் 11 வயதுச் சிறுவன் ஒருவன் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட சம்பவத்தில் படைத்தரப்பு எந்த விதத்திலும் தொடர்புடையது அல்ல.

பலாலி படைத்தலைமையகம் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தது.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவன் கடந்த புதன்கிழமை காலை தனிப்பட்ட ரியூசனுக்கு சென்றவேளை கடத்திச் செல்லப்பட்டு, படையினர் அச் சிறுவனை மீட்டு பொலிஸில் ஒப்படைத்ததாகவும் வெளியான செய்தி குறித்தே படைத் தலைமையகம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

இந்தச் சம்பவம் குறித்து பலாலி தலைமையகத்தைச் சேர்ந்த மேஜர் கபில தகவல் தெரிவிக்கையில்-

பிரஸ்தாப சிறுவன் கடத்தப்பட்ட சம்பவத்தில், படையினர் சிறுவனை மீட்டதாக வெளிவந்த செய்தியில் உண்மையில்லை. படையினர் சிறுவனையோ வேறு எவரையுமோ மீட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனரா என்பது குறித்து விசாரணை நடத்தினோம். அப்படி எதுவும் நடக்கவில்லை எனத் தெரியவந்தது- என்று குறிப்பிட்டார்.

(அ-1)


YOUR BEST
Mother Boards
Asus Intel 945GC-MX
Intel Original 945GCNL
Foxconn Intel 945GC
MSI Core 2 Duo
AsRock & Mipaq 478
PROCESSORS
Intel Celeron D 3.06
Intel Pentium 4 3.0/2m
Intel Dual Core 3.0/4m
Intel C2D 2.2Ghz/2m
Intel C2D Extr 2.6/4m
Memories
Flash Drives
Monitors CRT/LCD
Viewsonic, Samsung, Intex & LG 15 & 17"
UPS
Abilarix, PowerTree Intex 600VA,650VA, 1KVA & 1.5KVA
Casings LATX
Attractive Models
COMPUTER TABLES
MicroLab, Creative WOOFERS
IBM/HP Branded PC
Printers
Laser Jet
Dot Matrix
InkJet
Scanners
New Genuine Intel PC
With New 17" Monitor& UPS
Just Below 47500/-
Assembled Systems
Unipro
Intel P4 3.0/2m,
Intel 945 MB
512Mb DDR2
80Gb Sata HDD,
Combo
15" SS/VS Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
UniCore
Intel C2D 2.2/2m,
Intel 945 MB
1 Gb DDR2
160Gb Sata HDD,
DVD-RW
17" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
கணினி வாங்க முன் ஒரு நிமிடம்!!
பின்பு கவலைப்பட தேவையில்லை
தரமான உதிரிகள்! குறைந்த விலை! நீடித்த ஆயுள்!
Contact US
UNIT
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.